
# கல்வெட்டு

# KALVETTU

திருவள்ளுவராண்டு 2035 (தாரண ஆண்டு) புரட்டாசித் திங்கள்



மகாதேவர் கோயில் - இடையார்பாக்கம்

கல்வெட்டுக் காலாண்டிதழ் : 64 (அக்டோபர் 2004) விலை ரூ.5-00
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

A177

# உள்ளே . . .


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | 1 |
| 1. | Poondi and Gudiam Cave - Pre-Historic Sites of Tamilnadu<br>- T.S. Sridhar, IAS | 2 |
| 2. | முருகன் கோயிலுக்கு இஸ்லாமியர் கொடை<br>- முனைவர் சு. இராசகோபால் | 5 |
| 3. | Anthropology - Archaeology and the Method of Science<br>- Prof. V. Sudersen, S.Sumathi | 8 |
| 4. | தாராசுரம் கோயிலில் பெயர்ப்பொறிப்புடன் கூடிய மகா துவார சிற்பங்கள்<br>- கோ. திருமூர்த்தி | 11 |
| 5. | சின்னகொம்மேஸ்வரம் காசிவிசுவநாதர் கோயில்<br>- து. துளசிராமன் | 13 |
| 6. | நெல்வாய்க் கல்வெட்டு<br>- கு. குமரவேல் | 15 |
| 7. | அழகிய சோழப் பெரும்பள்ளி<br>- கி. ஸ்ரீதரன், ப. பூபாலன் | 17 |
| 8. | அளேபுரம் - ஸ்ரீ உக்கிர நரசிம்மமூர்த்தி திருக்கோயில்<br>- ச. செல்வராஜ் | 19 |
| 9. | ஆறிகம்பேடு கல்வெட்டு<br>- சீ. இராமச்சந்திரன் | 22 |
| 10. | குத்தம்பாக்கம் கல்வெட்டுகள்<br>- ச. கிருஷ்ணமூர்த்தி | 25 |
| 11. | வரலாற்றுச் சின்னங்களைப் போற்றுவோம்<br>- முன் இதழ் தொடர்ச்சி | 29 |
| 12. | கோயம்பேடு கல்வெட்டுகள்<br>- ச. கிருஷ்ணமூர்த்தி, சீ. இராமச்சந்திரன் | 32 |
| 13. | Archaeology and Tourism<br>- T.S. Sridhar, IAS | 35 |
| 14. | துறை நிகழ்வுகள் - தொகுப்பு<br>- கி. ஸ்ரீதரன் | 42 |



கல்வெட்டு இதழ் பதிப்புக்குழு

கி.ஸ்ரீதரன், பதிவு அலுவலர்

அர.வசந்தகல்யாணி, கல்வெட்டாய்வாளர் (சி.நி)

சீ.வசந்தி, அகழாய்வாளர்

நிழற்படங்கள்: மு.த. ஸ்ரீதரன், நிழற்படம் எடுப்பவர்



கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

திரு. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையர்,
தொல்லியல் துறை

மூன்றாவது குறுக்குச் சாலை,
சி.ஐ.டி. வளாகம்,
தரமணி, சென்னை – 600 113.
9-10-2004

# பதிப்புரை

மனித இனத்தின் வரலாறு கற்காலத்திலிருந்து தொடங்குகிறது. சென்னைக்கு அருகில், பூண்டி நீர்தேக்கத்திற்கு அருகாமையில் கற்கால மனிதர்கள் வாழ்ந்த குடியம் குகை மற்றும் பூண்டியில் இத்துறை அமைத்துள்ள கற்கால வாழ்க்கை பற்றிய காட்சியகம் பற்றிய கட்டுரை இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. மேலும் தொல்லியலுக்கும் மானிட இயலுக்குமான தொடர்பு பற்றிய கட்டுரை ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

வரலாற்று ஆய்வுக்கான அடிப்படைச் சான்றுகளில் இன்றியமையாததாக விளங்குபவை கல்வெட்டுகள் ஆகும். கல்வெட்டுகள் பல அரிய வரலாற்றுச் செய்திகளை அளிக்கின்றன. முருகன் கோயிலுக்கு இசுலாமியர் அளித்த கொடை பற்றிய கட்டுரை சமயப் பொறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. 19-ஆம் நூற்றாண்டில் இரு கிராமங்களுக்கு இடையே ஏற்பட்ட தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்பட்ட முறை பற்றிய ஒரு கட்டுரையும், வீரவீர ஜினாலயம் என்ற பூண்டி சமணர் கோயில் பிற்காலத்தில் 'அழகிய சோழப்பெரும்பள்ளி' என்று பெயர் மாற்றம் அடைந்ததைக் காட்டும் கட்டுரையும் குறிப்பிடத்தக்கவை.

கல்வெட்டுகள் பாறைகளிலும் தனிக் கற்களிலும், தூண்களிலும் பொறிக்கப்பட்டு பல இடங்களில் அதன் முக்கியத்துவம் அறியப்படாமல் சிதறிக் காணக்கிடக்கின்றன. தனித்தும், பாதுகாப்பு இன்றியும் இருக்கும் இவை விரைவில் அழிந்துவிடும் நிலையை கருத்தில் கொண்டு விரைந்து படியெடுக்க இத்துறை கல்வெட்டுப் படியெடுக்கும் முனைப்புத் திட்டம் ஒன்றைத் தற்பொழுது மேற்கொண்டு வருகிறது. அத்தகைய ஆய்வில் கோயம்பேடு, ஆறிகம்பேடு, குத்தம்பாக்கம் ஆகிய இடங்களில் புதியதாகக் கல்வெட்டுகள் பார்க்கப்பட்டுப் படியெடுக்கப்பட்டன. அவை அளிக்கும் வரலாற்றுச் செய்திகள் தொடர்பான கட்டுரைகள் இவ்விதழில் வெளியிடப்படுகின்றன. 11-வது நிதிக்குழுவின் மூலம் சீரமைப்புப் பணிகள் நடைபெற்றுவரும் வரலாற்றுச் சின்னங்கள் பற்றிய குறிப்பு இவ்விதழிலும் தொடர்கிறது சுற்றுலா மேம்பாட்டிற்குத் தொல்லியல் துறை எவ்வழியில் உதவுகிறது என்பதை விளக்கும் கட்டுரையும் இடம் பெறுகிறது.

தொல்லியல் ஆய்வில் புதிய கண்டுபிடிப்புகளை எடுத்துக் கூறும் வகையில் அமைந்துள்ள இக்கல்வெட்டு இதழ் அனைவருக்கும் பயன்படும் எனக் கருதுகிறேன்.

திரு. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.

# POONDI AND GUDIYAM CAVE

## 1

## Pre Historic Sites of Tamilnadu

**T. S. Sridhar,** I.A.S.
Special Commissioner of Archaeology.

The history of Chennai as most of us know started from the time when the British established their trading company here, but astonishingly Chenni (Madras) has been a place of habitation for Prehistoric hominids who had lived here millions of years ago. The chain of discoveries had started off when Sir Robert Bruce Foote accidentally discovered stone tool at Pallavaram in the year 1863 A.D, followed by the discovery of many number of artefacts in and around Poondi near Chennai. This tremendous discovery in the field of Pre historic archaeology pushed back the antiquity of man in Tamil Nadu to more than half a million years ago and placed this region on the world map of prehistoric culture.

Interestingly the Poondi reservoir, from where our city derives its water, turns out to be significantly important for archaeologists and geologists around the world. The Gudiyum cave the first of its kind in India, discovered by geologist Sir Robert Bruce Foote exists near Poondi in Tiruvallur taluk of Tiruvallur district. and reaching there takes some adventurous paths into the silent forests, which can actually turn out to be a nice expedition for trekkers and even nature lovers.

Millions of years ago, man did not live as we live today. He lived in jungles like most of the animals. The animals were stronger than man and so he was afraid of them. He climbed up the trees or hid himself in caves at night. He ate fruits, nuts, berries and sweet roots or plants that were available to him. Whenever he could kill an animal with his bare hands, he ate the flesh raw. He did

not know how to grow crops. As he could not find his food at one place, he had to move from one place to another in search of fruit and nuts and to kill animals for food.

It was very difficult to dig out roots or to kill animals with bare hands. So he needed to tools. He found that stones and rocks could be shaped to do his job easily. He picked up heavy stones and rocks, sharpened them and tied them to sticks with hair or nervous and used them as spears. These were his first tools. Thus he could dig out roots with sharp edged stones or kill an animal without going very near to it. The first tool that man made were not very good but served his purpose. Some of those tools have been discovered from ancient caves and are kept in museums.

In India, except Sind and Kerala, the remains of early Palaeolithic Age (Pre historic period) or Stone Age tools have been found throughout the country. Most of the stone implements have so far been collected from the surface of the earth but some from the terraces of the rivers. Taking into consideration of distinct Geographical features and different manufacturing traditions, scholars have divided the stone tools of this Palaeolithic (Palae-old, lith-stones, old stone age) into two groups. 1. Soan (Punjab) Industries, 2. Madras Industries. Hand axe and cleavers are the main components of the Madras tools. These early stone implements have been discovered at Korttalaiyar Valley in and around Thiruvallur. The most important characterization in the industry of this region is the presence of the cores. That is the stone used for making implements.

**Gudiyam :**

Gudiyam is about 10 km from the Poondi reservoir and the actual cave can be reached from foothills by walking at a distance of 3 km. The huge Gudiyam cave is presently known by the local people as Manachaman Cave and the

people of the nearby villages visit on Chitrapurnima day to worship the Goddess even today. The cave is about 110 feet height and 200 feet breath; about 200 people can stay here at a time similar rock shelters, sixteen in number were noticed at Gudiyam. Out of them only 6 were inhabited by early man. This rock shelter of the Stone Age man was excavated in the year 1963 by the Archaeological survey of India. Three trenches were laid one inside the rock shelter and other two away from the shelter. The occupational deposit of this place appears to be incidental and not regular permanent residence of the early man.

The Department of Archaeology, Government of Tamil nadu has its museum exc!usively for the exhibits of the pre historic artefacts found in around Poondi and in other parts of Tamil Nadu. This Museum was established in the year 1985, but it was shifted to the present premises in the year 1993. The museum is open on all working days except on Friday and it is open to public from 10 am to 5.30 pm. The entrance fee for adult is Rs. 5/- and for the children are Rs. 3/- The entrance fee for foreigners adult is Rs. 50/- and for the children are Rs. 25/-.

## பிழைத்திருத்தம்

கல்வெட்டு இதழ் 62 (ஏப்ரல் 2004) "திருச்செந்தூர் மேலைக் கோபுர ஆய்வு" கட்டுரையில் பக்கம் 3, பத்தி 2, வரி 3-இல் "ரிபெல் சேதுபதி எனப்படும் முத்துராமலிங்கசேதுபதியுடன் இணைந்து" என்று இருப்பதை, "செல்லத்தேவர் எனப்பட்ட விசயரகுநாத சேதுபதியுடன் இணைந்து" எனத் திருத்திப் படிக்க வேண்டும்.

**சீ. இராமச்சந்திரன்,**
கல்வெட்டாய்வாளர்

# 2 முருகன் கோயிலுக்கு இஸ்லாமியர் கொடை

சு. இராசகோபால்
கல்வெட்டாய்வாளர்

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டத்தில், சென்னை-பாண்டி கடற்கரைச் சாலையில் இடைக்கழி என்று அழைக்கப்படும் ஊரருகிலே நயினார்குப்பம் என்று ஒரு சிற்றூர் உள்ளது. நயினார்குப்பம் பேருந்து நிறுத்தத்திலிருந்து சுமார் 1/2 கி.மீ. தொலைவில் உள்ள தோப்பில் ஒரு தூணில் கல்வெட்டு உள்ளது. இத்தோப்பு நிலம், பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள எல்லையம்மன் கோயிலுக்குச் சொந்தமானது என்று ஊர் மக்கள் குறிப்பிட்டனர். இங்குள்ள கல்தூண் சுமார் 8 அடி உயரமுள்ளது. மேற்பகுதியில் கழி வைப்பதற்கு ஏற்ப வளைவு உள்ளது. இது கிணறு அல்லது ஏற்றத்தின் தூணாக இருந்து இருக்கலாம். முன்பகுதியில் முருகனின் ஆயுதமான சக்தியும், வாகனமான மயிலும் கோட்டுருவமாகப் பொறிக்கப்பட்டுள்ளன. அதன்கீழ் 33 வரிகளுக்கும் கூடுதலாகக் கல்வெட்டுள்ளது. சுமார் 3 அடி மண்ணை அகற்றிக் கல்வெட்டின் கீழ்ப் பகுதி படியெடுக்கப்பட்டது. எனினும் மர வேர்கள் இருந்தமையால் அடிப்பகுதியிள்ள ஒரு சில வரிகள் படியெடுக்க இயலவில்லை. தூணின் பின்புறம் 28 வரிகளில் கல்வெட்டு பொறிக்கப்பட்டு முற்றுப் பெற்றுள்ளது. நன்கு செதுக்கப்படாமல் மேடு பள்ளமாக உள்ள கல்தூண் மீது கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளதால் எழுத்துகளை எளிதில் படிக்க இயலவில்லை.

தாரண வருடம் மற்றும் சீரங்கதேவ மகாராயர் பெயர் உள்ளதால் இக்கல்வெட்டு கி.பி. 1644-ல் விஜயநகரர் ஆட்சியில் பொறிக்கப்பட்டதாகக் கருதலாம். விஜயநகரர் நிர்வாக அமைப்பில் சிறு பகுதிகள் பேரரசின் கீழ்ப்பட்ட நாயக்கர்களால் நாயக்கத்தனம் என்ற பெயரில் நிர்வகிக்கப் பட்டன. நாயக்கத்தனத்திற்கு இணையாக அமரம் என்ற பெயரிலும் சிறுசிறு பகுதிகள் நிர்வகிக்கப்பட்டன. இக்கல்வெட்டின் காலம் விஜய நகரப் பேரரசு வலுவிழந்து முடிவுறும் நிலையில் இருந்த காலமாகும். எனவே விஜயநகரப் பேரரசின் ஆதரவுடன் இஸ்லாமிய சுல்தான்களின் ஆட்சி இருந்தது. அவர்களுக்குக் கீழ் இஸ்லாமியர்கள் அமரகிராம நிர்வாகி களாக இருந்துள்ளனர்.

கல்வெட்டுள்ள நயினார்குப்பம் நான்கு ராவுத்தர்களின் கீழ் அமர கிராமமாக இருந்துள்ளது. இவர்கள் குரமுகொண்டா பகுதியில் அரசு கந்த வாலம் நிர்வாகியாக இருந்த குயீசனாராவுத்தர் நலம் கருதி (புண்ணியமாக)

நயினார்குப்பத்தில் உள்ள தென்னை, மா, பலா மரங்கள் நிறைந்த தோப்பினை (கல்வெட்டுள்ள பகுதி) 6 கி.மீ. தொலைவிலுள்ள செய்யூர் கந்தசாமி கோயிலுக்குச் சர்வமான்யமாகத் தந்துள்ளனர். இச்செய்தியை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

அந்த நான்கு ராவுத்தர்களின் பெயர்கள். 1. றெகனா ராவுத்தர் 2. நல்லன் ராவுத்தர், 3. அல்லி ராவுத்தர், 4. கான் ராவுத்தர் என்பனவாகும். இஸ்லாமிய நிர்வாகி ஒருவருக்குப் புண்ணியமாக இஸ்லாமியர் நால்வர் தங்கள் உரிமைக்கிராமத்தில் (அமரம்) உள்ள நிலத்தினை இந்துக் கடவுளான முருகன் கோயிலுக்குக் கொடை கொடுத்திருப்பது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். அரசு புரிவோர் அவர்களின் கீழ் உள்ள மக்களின் உணர்வுகளை மதித்து சமயப் பொறையைக் கொண்டிருப்பது நல்லாட்சிக்கு எடுத்துக் காட்டாகும்.

இதுபோல இந்து-இஸ்லாமிய சமயப் பொறையைக் குறிக்கும் கல்வெட்டுகள் இன்னும் சில உள்ளன. இராமநாதபுரம் மாவட்டம் உத்திர கோசமங்கையில் ஊர் நிர்வாகியான இஸ்லாமியர் ஒருவர். விளக்குகள் நிறைந்த திருவாசி ஒன்றினை அவ்வூர் சிவன் கோயிலுக்குச் செய்து கொடுத்துள்ளமையும், கும்பகோணம் அருகில் திருநாகேஸ்வரம் கடைவீதியில் இருந்த, இந்து மற்றும் இஸ்லாமிய வணிகர்கள் அவ்வூர் அம்மன் கோயில் வழிபாட்டிற்காகக் கடைகளின் மகமையைக் கொடுத்துள்ளதைச் சில கல்வெட்டுச் சான்றுகளாய்க் கூறலாம்.

**கல்வெட்டின் வாசகம்**

1. தாரண வரு
2. ஷம் பங்கு
3. னி மாதம் 25
4. வ ஸ்ரீ மந் ம
5. கா மண்ட
6. லேசுபர சீர
7. ங்க ராயர் ே
8. தவ மகாராய
9. ர் அவர்கள் ரா
10. ச்சியம் பண்
11. ணுகையில்
12. சுவாமிக்கு ெ
13. வங்களப்ப னா
14. யக்கர் சீர்மையி
15. ல் குரமு கொண்
16. டா கற்தவாலத்து
17. குயீசனராவுத்த[ர்*]
18. புண்ணியமாக ெ
19. றகனா ராவுதற் ந
20. ல்லன் ராவுத்த
21. ர் அல்லி ராவுத்
22. தர் கான் ராவுத்
23. தர் யிவர்கள் நா
24. லுபேரும் ...

25. ... விட்ட
26 தன்மம் எ
27. ங்கள் அம
28. ரக் கிறாமம் நயி
29. னார் குப்பத்தி
30. ல்..
31. ....ர் மக
32 மானிய
33. த்துக்கு ....
34. குத் தோப்பு ெ
35. தன்ன மரமும்
36. மாமரம் பலா
37. மரம் மற்றும் உ
38. ள்ள பல விருஷ்
39. ஷமும் நிலமு
40. ம் தோட்டத்
41. திலே யிருக்
42. கிற குடியும் ெ
43. சய்யூர் கந்தசுவா
44. மியாற்கு சறுவ
45. மான்யமாக சந்
46. திராதித்த வ
47. ரைக்கும் கட்ட
48. ளையிட்டோ
49. ம் யிந்த தன்மத்
50. துக்கு ஆதா மொ
51. ருவர் அகுதம் பண்
52. ணினவர்கள் தாய்
53. தகப்பன் குரு
54. வினையும் கெ
55. ங்கை கரையி
56. லே காராம்ப
57. சுவை கொ
58. ன்ற தோஷத்
59. திலே போக
60. கடவர்களாக
61. வும் உ

# 3 Anthropology-Archaeology and the Method of Science

Professor. V. Sudarsen &
S. Sumathi
Department of Anthropology
University of Madras, Chennai.

Anthropology as an aeademic discipline is of relatively recent origin. Its association with colonialism is a definite part of history of anthropology. It is often said that two most associated people with colonialism are Christian missionaries and anthropologists. Anthropology has come a long way and traversed diverse paths and it occupies, today, a special space within the broad field of social sciences.

**Time Space - humanity**

The most common definition of anthropology is the *Study of Man* (should read *human being* which is woman + man). But what is a study of human being? This is basically the studies of human being from its origins to the present on one hand - which is the temporal dimension and the study of human being in terms - which is the contemporary or spatial dimension. Thus, the study includes the time-space understanding of humanity. Another dimension needs to be added to the time-space i.e., the biological or physical and the social and cultural aspects. Thus there is a sub discipline of *biological anthropology* which includes the historical or evolutionary aspects and a contemporary study of genetics and physical variation. While the social cultural sub-discipline covers a historical dimension referred to as archaeological anthropology and the study of contemporary societies called the ethnography.

In this short note an attempt is made to understand the method of science followed in social - cultural anthro-

pology but with one differences while dealing with the time dimension and the space dimension.

**Method of Science**

J. V. Narlikar the great astro-physicist of India, explained the method of science in simple terms while discussing a notorious incident at that time - the Ganesha idols "drinking" milk.

Narlikar in a very simple, yet very effectively, explains the method of science. He says that it includes basically four steps which could be represented as a flow-chart:

| Identifying the problem/phenomenon/Research Questions |

↓

| Setting up the experiment/Field |

↓

| Observation/Data generation |

↓

| Interpretation/derivation of generalization |

↓

Keep the four major steps of scientific methodology as the background, the methodology followed in archaeology anthropology and ethnography need to be understood and assessed.

**Ethnography and Archaeology**

In case of ethnography, the four steps are basically the same. The social-cultural phenomenon are the question that needs to be answered is clearly the first step. Either one start with assumption like "women of small/marginal farming households in Tamilnadu contribute more to the household economy than the women of larger/medium farming

houreholds" or "close-kin marriage are more among the tribal communities (or a particular tribe) than the caste communities." It is also possible to study a social or cultural phenomena or a simple ethnographic study of a community. Selecting the appropriate field study is the second step. Determining the specific data and the techniques to be used for date collection, and collection of data form the third step. An analysis and interpretation forms the fourth step. There is a loop in the flow-chart. Based on the analysis and interpretation, if there is need be, the initial research question can be changed or modified.

Archaeological anthropology has the same goals has do the contemporary social-cultural anthropology with one difference-the former studies extinct societies while latter studies the contemporary societies. But in terms of the four major steps of scientific method and the order in which the steps take place after. Often the first step is the chancc discovery of the evidence which leads to the formulation of the research question. In fact new research questions (or often the mocification of earlier question) do not arise often as a consequence of the last step (shown as a loop of the flow-chat) but often the product of the second and the third steps of the scientific method. For instance, many of Gordan Childe's formulations are drawn this way. In fact Gordon Childe provided, on the basis of the field evidence, newer insights as well as newer questions. Leakey's work in olduvai gorge is a monumental evidence testifying, at the same time raising several questions, to the broad sub-phases of evolution within the lower palaeolithic stage. In essence it answered several questions at the same time raising quite a few newer research questions. This is the nature of evidence (or data available) which leads to both a greater understanding as well as speculation. This process is inbuilt in to the methodology of archaeology but at the same time it is scientific.

# 4 தாராசுரம் கோயிலில் பெயர்ப் பொறிப்புடன் கூடிய மகாதுவார சிற்பங்கள்

கோ. திருமூர்த்தி
தொல்லியல் உதவி ஆய்வாளர்
இந்திய தொல்லியல் துறை
சென்னை-9

சிற்பங்களைக் கோயில் கருவறை, சன்னதிகள், தேவகோட்டங்கள் மட்டுமல்லாது விமான அடுக்குகள் மற்றும் கோபுரத் தளங்களிலும் காண்கிறோம். குறிப்பாகப் பெயர்ப் பொறிப்புடன் (LABEL INSCRIPTIONS) சிற்பம் மற்றும் படிமங்களை சோழர் காலத்திய கீழக்கடம்பூர், சிதம்பரம் போன்ற இடங்களில் உள்ள கோயில்களில் காணலாம். அதே காலத்திய தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயிலில் உள்ள நாயன்மார் கதைச் சிற்பங்களும், அண்மையில் கண்டெடுக்கப்பட்ட சிறுத்தொண்டர் நாயனார் படிமமும் பெயர்ப் பொறிப்புடன் காணப்படுகின்றன. மேலும் அக்கோயிலில் உள்ள பாழடைந்த மகாதுவாரத்தின் அடிப்பகுதியிலும் கோஷ்ட தேவதைகள் பெயர்ப் பொறிப்புடன் காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

## ஐராவதேஸ்வரர் கோயில்

தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திலிருந்து 6 கி.மீ. தெற்கே தஞ்சை செல்லும் வழியில் அமைந்துள்ள தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயில் சோழர் கால கட்டடக்கலைக்கும், சிற்பக்கலைக்கும் ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாகும். சோழ மன்னன் இரண்டாம் இராஜராஜனால் (கி. பி. 1150-73) ராஜராஜ புரத்தில் (பின்னாளில் தாராசுரம் என மருவிற்று) சிவனுக்கு எடுப்பித்த கற்றளியில் சரபேஸ்வரமூர்த்தி போன்ற பல்வேறு சிவனின் வடிவங்கள், 63 நாயன்மார்களின் சிற்பங்கள், தேர்ச் சக்கரத்தைப் போன்ற இராஜகம்பீரன் மண்டபம் ஆகியவற்றை ஏற்படுத்தித் தான் ஓர் ஒப்பற்ற சிவபக்தன் என்று நிலைநாட்டினான்.

கிழக்கு நோக்கிய இக்கோயில் வளாகம் சிவன் மற்றும் அம்மன் ஆகியோர்க்குத் தனிக்கோயிலையும் மற்றும் இவ்விரண்டு கோயில்களையும் உள்ளடக்கிய மகாதுவாரத்துடன் கூடிய பிராகாரத்தையும் கொண்டிருந்தது. ஆனால் பிராகாரம் சுவடில்லாமல் அழிந்துள்ளமை வருந்தத்தக்கதாகும்.

## மகாதுவாரம் (கோபுரம்)

கிழக்கில் அமைந்துள்ள பாழடைந்த மகாதுவாரம் (முற்றுப் பெறாத கோபுரம்) இந்தியத் தொல்லியல் துறையின் பராமரிப்புப் பணியினால் தன்னுடைய பழம்பொலிவினைப் பெற்று வருகிறது. கருங்கல்லால் கட்டப்பட்ட மகா துவாரத்தின் நான்கு பக்கங்களிலும் கோஷ்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கால வெள்ளத்தின் மாற்றத்தினால் பெரும்பாலான கோஷ்டங்கள் சிற்பங்களின்றிக் காணப்படுகின்றன. ஆனால் அக்கோட்டங்களின் மேற்பகுதியில் பொறிக்கப்பட்ட கோஷ்ட தேவதைகளின் பெயர்கள் மட்டும் பொறிக்கப்பட்டு நிலைத்திருப்பதோடு மகாதுவார கோஷ்ட தேவதைகளின் சிறப்பினையும் நமக்கு எடுத்தியம்புகின்றன. வடக்கு, மேற்கு, தெற்கு, கிழக்கு ஆகிய பக்கங்களில் உள்ள கோஷ்ட தேவதைகள் பின்வருமாறு:

**வடக்கு**

1) ஆதிசண்டேஸ்வரதேவர் 2) கங்காதேவி 3) தும்புரு நாரதர் 4) வைஸ்ரவணன் 5) சந்திரன் 6) மஹாசாஸ்தா 7) நாகராஜா 8) வாயு இவற்றுள் சந்திரன் மற்றும் வாயு சிற்பங்கள் மட்டுமே காணப்படுகின்றன,

**மேற்கு**

9) ஹிரில்லேகாதேவி 10) ருத்ராணி 11) வைஷ்ணவி 12) பிராமணி 13) வருணந் 14) — 15) ஸ்ரீநந்திகேஸ்வரர் 16) பெரியதேவர் 17) — 18) சந்தியாதித சக்தி 19) ஸாந்தி சக்தி 20) வித்யா சக்தி 21) பிரதிஷ்டாஸக்தி 22) நிவ்ரித்தி சக்தி. இவற்றுள் ருத்ராணி சிற்பம் மட்டுமே எஞ்சியுள்ளது.

**தெற்கு**

23) தக்ஷபிரஜாபதி 24 )-- 25) — 26) ஸ்ரீவராஹர் 27) யமுனா தேவி 28) — 29) யந்த்ரதேவி 30) ரதி காமதேவர். இவற்றுள் யமுனா தேவி சிற்பம் மட்டுமே நல்ல நிலையில் உள்ளது.

**கிழக்கு**

31) அக்னிதேவர் 32) அகஸ்தீயதேவர் 33) ஸ்ரீதேவி 34) ரதிதேவி 35) துர்காதேவி 36) தேவேந்திரன் 37) சங்கநிதி 38) பத்மநிதி 39) சூர்ய தேவர் 40) சுப்ரமணியதேவர் 41) க்ஷேத்ரபாலர் 42) ஸரஸ்வதி 43) விஸ்வ கர்மா 44) ஈஸானதேவர், இவற்றுள் சுப்ரமணியதேவர், ஸரஸ்வதி சிற்பங்கள் மட்டுமே உள்ளன,

கி.பி, 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இப்பெயர்ப் பொறிப்பில் தமிழ் எழுத்துகளுடன் கிரந்த எழுத்துகளும் பெருமளவில் கலந்துள்ளமை நோக்கத் தக்கது. இக்கோஷ்ட தேவதைகளுள் பெரியதேவர், ஸந்தியாதிதகளில் சக்தி, சாந்தி சக்தி, விஸ்வகர்மா, ருத்ராணி போன்ற சிற்பங்கள் சிற்ப ஆய்விற்கு முக்கிய மானவையாகும். இச்சிற்பங்கள் யாவும் தெய்வ வடிவங்களைச் சரிவர அறிய உதவு வதுடன் அவற்றின் காலம், கல்வெட்டுகளின் எழுத்தமைதி ஆகியவற்றை ஒன்றோ டொன்று இணைத்து ஆய்வு செய்யப் பேருதவியாகவும் விளங்குகின்றன. இச்சிற்பங் கள் யாவும் தாராசுரம் கோயிலின் சிறப்புகளையும், அக்காலத்திய சைவ சமயத்தின் வளர்ச்சியையும் எளிதில் உணர்த்துகின்றன. மேலும் பிற்காலத்தில் குறிப்பாக நாயக்கர் காலத்தில் இக்கோஷ்ட தேவதைகளே தனிச்சிற்பங்களாகவும் தூண்களில் ஆளுயர சிற்பங்களாகவும் வடிக்கப்பட்டன என்பது ஈண்டு நோக்கத்தக்கதாகும்,

**குறிப்பு**

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் (மகாதுவார சிற்பங்கள் பெயர்ப் பொறிப் புகள் உட்பட) 1908-ஆம் ஆண்டில் இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்புப் பணியின்போது மண்ணால் மூடப்பட்டிருந்த இவை மீண்டும் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

5

## சின்னகொம்மேஸ்வரம் காசிவிசுவநாதர் கோயில்

து. துளசிராமன்,
காப்பாட்சியர்
பூண்டி

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆம்பூருக்கு ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் வடகிழக்கே, இருப்புப் பாதைக்கும் தேசிய நெடுஞ்சாலைக்கும் அருகில் சின்னகொம்மேஸ்வரம் என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூருக்குக் கிழக்கே உள்ள மலையடிவாரத்தில் தென்னந்தோப்புகளுக்கிடையில் காசி விசுவநாதர் கோயில் அமைந்துள்ளது.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் விஜயநகரப் பேரரசு காலத்தில் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ள இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம் ஆகிய கட்டட அமைப்பு களைப் பெற்றுள்ளது. இக்கோயிலில் திருச்சுற்று மாளிகை எடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் கிழக்குப்புறப் பகுதி முழுவதும் விழுந்து போய் உள்ளது.

விஜயநகரர் கட்டடக் கலைப்பாணியில் அமைந்துள்ள இக்கோயிலின் தேவகோஷ்டங்களில் சிற்பங்கள் ஏதுமில்லை. கருவறையில் உள்ள லிங்கத்திற்குத் தற்போது தின்சரி பூஜைகள் நடைபெறுகின்றன. கிழக்கு நோக்கி அமைந்துள்ள கோயிலின் வடகிழக்கு மூலையில் அம்மன் சன்னதி உள்ளது.

இக்கோயிலின் கருவறை மற்றும் அர்த்த மண்டப அதிட்டானப் பகுதியில் விஜயநகர அரசர் **சாளுவ இம்மிடி இராயர்** காலத்திய (சக வருடம் 1470-கி.பி. 1548) மூன்று கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் இறைவனைக் கொம் மீசுரமுடைய நாயனார் என அழைக்கின்றன. தற்போது சின்ன கோமேஸ்வரம் என வழங்கப்படும் இவ்வூர் அக்காலத்தில் **ஆண்மையூர் திம்ம சமுத்திரம்** என அழைக்கப்பட்டது என்பதையும். ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப் படுவூர் கோட்டத்துக்கரைவழி

ஆத்தி நாட்டில் இவ்வூர் இருந்தது என்பதையும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இறைவனின் பூஜைக்காக சின்னகோமேஸ்வரத்துக்கு வடக்கில் பாயும் பாலாற்றின் அக்கரையில் உள்ள சாத்தன்பாக்கத்தில் நிலம் கொடையாக விட்ட செய்தியையும், கோயிலில் விளக்கெரிக்கப் பசுக்களும் எருதுகளும் தானமாகக் கொடுத்த செய்தியையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

மேற்புறமும் கீழும் நாற்பட்டையும், இடையில் எண் பட்டையும் கொண்டு விளங்கும் அழகிய கருங்கற் தூண்கள் தாங்கும் திருச்சுற்று மாளிகையும், கோயிலின் அதிஷ்டானச் சுவர், கூரை ஆகியவையும் விஜயநகரர் கட்டடக் கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

## Visit of Special Commissioner of Archaeology to Government Oriental Manuscripts Library and Research Centre on 22-6-2004.

It was a pleasure and educative to visit this splendid Library with its treasure of largest collections in the world of rare, original palm leaf manuscripts numbering more than 73,000. The Library has so far brought out 457 publications in Tamil, Sanskrit, Telugu, Malayalam, Kannada, Urdu, Arabic, Persian and Marathi languages. It is a marvellous Research Centre for scholars from different countries - both Oriental and occidental. Countless scholars have obtained Ph.D. and other Research degrees in this hallowed institution set up in year 1869 by Mr. Colin Mackenzie. The library is well maintained; however steps may be taken to improve the A/c facility. My compliments to The Curator, Dr. Soundarapandian six Pandits, and the other staff for their dedicated and courteous service to the public.

My good wishes.

Sd/-

**T. S. Sridhar,** I.A.S.
Special Commissioner of Archaeology
Government of Tamil Nadu
Chennai-113.

Dated 22-6-2004

# 6 நெல்வாய்க் கல்வெட்டு

கு. குமரவேல்
முன்னாள் கல்வெட்டுப் பட்டயப் பயிற்சி மாணவர்

## அமைவிடம்

நெல்வாய் கிராமம், காஞ்சிபுரத்திலிருந்து வடக்கே பரந்தூர் செல்லும் சாலையிலிருந்து பிரியும் சிறு வழியில் கிழக்கே சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

## அமைப்பு

நெல்வாய் கிராமத்தின் கிழக்கே நிலத்தின் வரப்பினை ஒட்டியவாறு ஒரு கல்வெட்டு உள்ளது. 4x2 அடி உயரம் கொண்ட இக்கல்வெட்டு 141 ஆண்டு பழமையானது. 24 வரிகள் கொண்ட இக்கல்வெட்டு தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டுச் செய்தி

கி.பி. 1863-ல் ஏற்பட்ட தண்ணீர்ப் பிரச்சினை முடிவிற்கு கொண்டுவரப்பட்டதை இக்கல்வெட்டு கூறுகிறது. நெல்வாய் கிராமத்தார் பக்கத்து ஊரான தண்டலம் கிராமத்தார் மீது காஞ்சி தாசில்தார் முத்தம்சாமி நாயக்கர் முன்னிலையில் வழக்கு தொடர்கின்றனர். பின்பு அவ்வழக்கு 1863-ஆம் ஆண்டு செப்டம்பர் 3-ல் இரண்டு கிராமத்துப் பஞ்சாயத்தார்கள் ஒன்றுகூடி ஒரு முடிவிற்கு வந்ததால் திரும்பப் பெறப்பட்டது. அதன்படி நெல்வாய் கிராமத்தின் வயல்வெளிப் பகுதியில் உள்ள ஜம்மன் குட்டையை ஒட்டிய வடதோத்திரி மானியம் நிலம் முதல் 24 அடி கோலால் 39 கோல் தூரத்திற்கு (24x39=936 அடி வரை) சிலம் (அடைப்பு கட்டி நீரைத் திருப்புதல்) கட்டக்கூடாது என்றும் அதன் கிழக்கே சிலம் கட்டிக்கொள்ளலாம் என்றும் முடிவிற்கு வருகின்றனர்.

மேலும் எழுத்துக்கல் (கல்வெட்டு) அவ்விடத்தில் வைக்கவும் முடிவு செய்து கொள்கின்றனர். அம்முடிவிற்குப் புறம்பாக இரு கிராமத்தாரிடையே மீண்டும் கருத்து வேறுபாடுகள் ஏற்படின் காஞ்சி மாஜிஸ்ரேட் முன்னிலையில் 1863-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ல் திரும்பப் பெறப்பட்ட வழக்கு மீண்டும் தொடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட கிராமம் அபய கிராமம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இக்கல்வெட்டு 19-ஆம் நூற்றாண்டில் நீதிமன்றம், அரசு நிர்வாகம், ஊர் பஞ்சாயத்தார் ஆகியோர் மக்களிடம் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் முனைந்திருந்ததைக் காட்டுவ தாக உள்ளது.

## கல்வெட்டு வாசகம்

1. க அ சூ ங ரூ நவம்பற்
2. மீ உ எ தண்[ட]*லம் கிராம
3. த்தாரும் நெல்வாயி கிராமத்தா
4. ரும் நேறிட்ட தண்ணி விவா
5. தத்தை குறித்து நெல்வாயி கி
6. ராமத்தார் க[ா]*ஞ்சி தாலுகா தாசில்
7. தா[ர்]* முத்தம் சாமி னாயக்கரி[ட]*த்தில்
8. பிறாதாயி அபயகிரா[ம]*தாரும் தா
9. லுகாவில் றாஜியானது முன் க அ
10. சூ ங ரு செப்ட்டம்பற் மீ ங யி
11. ல் அபய கிரா[ம]*த்தாரும் கோரிய
12. பஞ்சாத்தார் தீர்ப்பு செய்தபடிக்கு
13. ஐம்மன் குட்டைக்கு படதோ
14. த்திரி மாநியம் கீழண்ட தளை முத
15. ல் உச அடி கோலால் ஙசு கோ
16. ல் வரைக்கும் சிலம் கட்டக் கூட[ா]து அதன்
17. கிழக்கு கட்டிகொள்ளுகறது அப்படியே
18. அபயகிராமத்தாரும் அதெக்கு எழுத்து
19. கல் நட்டுக்கொள்ளுகிறது யெந்
20. த கிராமத்தாறாவது வித்தியாசமாயி ந
21. டந்தால் க அ சூ ங ரு செப்ட்டம்பற் மீ கக
22. . . [லை] அபய கிராமத்தாரும் சர்காரில் கு
23. டுத்த றாஜ்னாம படிக்கி மேஸத்திரட்
24. டு ஷச்சைக்கு உள்ளாகுறோம்.

# 7 அழகிய சோழப் பெரும்பள்ளி

**கி. ஸ்ரீதரன்**, பதிவு அலுவலர்

**ப. பூபாலன்**, கல்வெட்டு படிஎடுப்பவர்

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டத்தில் ஆரணி - ஆர்க்காடு சாலையில் 3 கி.மீ. தொலைவில் பூண்டி அருகர் கோயில் அமைந்துள்ளது. சமணசமயக் கோயிலான இதனை வரலாற்றுச் சின்னமாகத் தொல்லியல் துறை பராமரித்து வருகிறது.

இக்கோயிலிலுள்ள செப்புத் திருமேனிகளை ஆய்வு செய்து பதிவு செய்வதற்காக முகாம் சென்றிருந்த பொழுது கோயிலின் கிழக்கே ஒரு வயலின் நடுவே கல்வெட்டு பொறிக்கப்பட்ட ஒரு தூண் இருப்பது அறியப்பட்டது. இக்கல்வெட்டு படியெடுத்து வரப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.

பல்குன்றக்கோட்டத்து மெய்யூர் நாட்டுப் பூண்டியில் அழகிய சோழப் பெரும்பள்ளி நாயனார்க்குத் திருவிளக்குக்குத் தான் பெறும் மகமை, நாட்டு வினியோகம் ஆகியவற்றைத் தானமாக அளித்த மையைத் தெரிவிக்கும் செய்தி இக்கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ளது. ஆனால் இக்கல்வெட்டில் மன்னன் பெயர் இல்லை. சக ஆண்டு எழுதப்பட்டுள்ளது. எனினும் ஆண்டுப் பகுதி படிக்க இயலாத அளவு பொறிந்துவிட்டது. பெரிதும் பிற்பகுதியும் சிதை வடைந்துவிட்டது. இக்கல்வெட்டின் எழுத்திமைதியைக் கொண்டு இதன் காலம் கி. பி. 14ஆம் நூற்றாண்டு என்று கருதலாம். கல்வெட்டின் மேற்பகுதியில் சமணப்பெண் தெய்வத்தின் [யக்ஷி] உருவம்அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது.

**கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம்
2. பல்குன்ற கொட்டத்து மெய்யூர் நாட்டு
3. பூண்டியில் அழகிய சோழப் பெரு
4. ம் பள்ளி நாயனார்க்கு திருவிளக்குக்கு

5. ச் ச[ம]ந்துக் குடுத்தார் . . [மகமை]னாட்
6 டு வினியோகத்துக்கு கட(வோ)ம்
7. நாட்டு வினியோகத்துக்கு
8. கொடு வந்த இவர்களுக்கு . . .
9. டவதல்ல இப்படிக்கு இது(வே)ம்
10. (ா)னியமாக விடு(த்)தோம் யா . . . கொ
11. ள் வோ(மாக) சிறப்பாகக் குடுத்தோம்
12. நாங்களு மிடக்கடவதாகவும்
13. . . . . . .க்கும். . . இப்
14. . . ஆவுத்தார்க்கும் . . . இப்
15. ல் இவை . . . னையாக
16. ம் யாக . இக்கட . . ம்
17. . . . . கடவோம்

இதில் குறிக்கப்படும் அழகிய சோழப்பெரும்பள்ளி முதலில் "வீர வீர ஜினாலயம்" என்று பெயர் பெற்றிருந்தது. பூண்டி அருகன் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள பாடல் கல்வெட்டு மூலம் இதனை அறிகிறோம்[1] சீயன் சம்பு என்ற பெயர்கள் அக்கல் வெட்டில் வருகின்றன. அதனைத் தொடர்ந்து "வீரவீரஜினாலயம் என்று தன் பெயர் பொறித்தனமத்து" என்ற தொடரும் வருகின்றது. சம்புவராயர் பணியாக இருக்கலாம் என்று தெ.க. ஆண்டறிக்கை 1900 எண்: 58 குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு குறிக்கும் வீரவீரசினாலயமே அடுத்து வந்த காலத்தில் "அழகிய சோழப் பெரும்பள்ளி" என்று பெயர் மாற்றம் பெற்றிருக்கலாம்[2].

அடிகுறிப்புகள்

1. S.I.I. Vol - VII-62.
2. இக்கல்வெட்டினைப் படித்து ஆய்வுக்கு உதவியவர் முனைவர் திருமதி நா. மார்க்சிய காந்தி, உதவி கல்வெட்டுக் கண்காணிப்பாளர்.

# அளேபுரம் - ஸ்ரீ உக்கிர நரசிம்மமூர்த்தி திருக்கோயில்

8

ச. செல்வராஜ்
தொல்லியல் அலுவலர்
தருமபுரி

அளேபுரம், தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் பென்னாகரத்தில் இருந்து தென்மேற்கில் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தருமபுரி - நாகமரை, நெருப்பூர் செல்லும் பேருந்துகள் மூலமும், பென்னாகரத்தில் இருந்து சிற்றுந்துகள் மூலமும் சென்றால் மடம், கூத்தப்பாடி கிராமங்களை அடுத்து அளேபுரம் என்ற ஊரை அடையலாம்.

**அளேபுரம்**

அளே என்பது கன்னடச் சொல். பழைய என்று பொருள். பழைய ஊர் என்ற பொருளில் அமைந்துள்ளது.

**உக்கிர நரசிம்மமூர்த்தி**

ஊரின் மையப் பகுதியில் கிழக்குப் பார்த்த நிலையில் கோயில் அமைந்துள்ளது. கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் எனக் கோயிலின் அமைப்பு காணப்படுகின்றது. உக்கிர நரசிம்மர் மூலவராகக் காட்சியளிக்கின்றார். கி.பி. 15-16ஆம் நூற்றாண்டுகளில் விசயநகர மன்னர்கள் வைணவத் திருக்கோயில்கள் பல எழுப்பினர். இவர்கள் பிற சமயத்தை ஆதரித்த போதிலும் வைணவத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் எம்பெருமான் விஷ்ணுவிற்குப் பல கோயில்களைக் கற்றளியாக அமைத்துப் பெருமை சேர்த்துள்ளனர்.

கருவறை விமானத்தில் நரசிம்ம மூர்த்தியின் உருவங்களையே சுதைச் சிற்பங்களாக அழகுற அமைத்துள்ளனர். இங்கு விமானம் மட்டுமே உள்ளது.

**அர்த்தமண்டபம்**

நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. அர்த்த மண்டபத்திற்கும், கருவறைக்கும் இடையே இடைக்கட்டு காணப்படு

கின்றது. இந்த இடைக்கட்டுக்குள் நுழையும் முகப்புப் பகுதியில் கம்பீரமான தோற்றத்துடன் காணப்படுவது துவார பாலகர் சிற்பங்கள் ஆகும். இவை மிகவும் நேர்த்தியாகவும் அழகுடனும் வடிக்கப்பட்டுள்ளன. இங்கு அர்த்தமண்டபத்தில் காணப்படும் தூண்களில் விஷ்ணுவின் அவதாரங்களான மச்சவதாரம், வாமன அவதாரம், கூர்ம அவதாரம் போன்றவை அழகிய புடைச்சிற்பங் களாகக் காட்டப்பட்டுள்ளன.

மேலும் தூண்களில் லட்சுமி நரசிம்மர், நர்த்தன கிருஷ்ணன், குழலூதும் கண்ணன், ஆஞ்சநேயர் சிற்பங்களும் பார்க்கத் தூண்டும் வகையில் அமைத்துள்ளனர். தூண்களில் ஓர் அரசனும் அரசியும் இறைவனை வணங்குவது போல காட்டப்பட்டுள்ளது சிறப்பிற்குரியது. இது இக்கோயிலைக் கட்டிய மன்னனாகவும் இருக்க வாய்ப்பு உள்ளது.

**மகாமண்டபம்**

இருபது தூண்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது மகா மண்டபம். இதனைத் தூண்கள் நிறைந்த மண்டபம் என்றும் கூறலாம். ‘இந்தத் தூண்களிலும் அனுமன் திருவுருவத்தைச் செதுக்கியுள்ளனர். அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந்த இந்தத் தூண்கள் இக்கோயிலுக்கு மேலும் அழகு சேர்ப்பனவாக உள்ளன.

நுழைவாயிலின் முன் காணப்படும் கொடிக் கம்பம் சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் வடகிழக்கே காலபைரவர் உருவச்சிலை ஒன்று வைக்கப்பட்டு பூசை செய்து வருகின்றனர். இங்குள்ள சிற்பங்களில் இது காலத்தால் முற்பட்டதாகத் தோன்றுகின்றது.

**தேர்ச்சிற்பங்கள்**

இங்கு பழுதடைந்த தேரில் இருந்த மரச்சிற்பங்கள் அனைத்தையும் கோயிலின் உள்ளே வைத்துப் பாதுகாத்து வருகின்றனர். அழகிய வேலைப்பாடு கொண்ட இம்மரச் சிற்பங்கள், இராமன், சீதை, அனுமன் மேலும் திருமணக் காட்சிகள் என அனைத்தையும் அழகுறச் செதுக்கியுள்ளனர்.

**கல்வெட்டுகள்**

இங்குள்ள கோயிலில் கல்வெட்டுகள் ஏதும் இல்லை. கொடிக் கம்பத்தின் கீழே ஓர் ஒழுங்கற்ற கல்லில் கன்னடக் கல்வெட்டு ஒன்று உள்ளது. அதுவும் மிகவும் பொறிந்த நிலையில் உள்ளது. இது போசளர் காலத்துக் கல்வெட்டு என்பதைத் தென்னிந்தியக் கல்வெட்டு சாசன நூல் குறிக்கின்றது.

**நடுகற்கள்**

ஊரின் வடமேற்கே இரண்டு நடுகற்கள் காணப்படுகின்றன. இந்த நடுகற்களில் ஒன்று வீரன் நேராக நின்ற நிலையில் வலது கையில் கம்பு ஒன்று வைத்திருப்பது போலக் காட்டப்பட்டுள்ளது. வீரனின் வலது பக்கம் நாய் ஒன்றும் உள்ளது. நாயின் அருகே பெண் ஒருத்தி தன் இடது கையை விரித்துக் காட்டிய நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை உடன்கட்டை ஏறுதல் என்று பொருள் கொள்வர். இதனை சதிக்கல் என்றும் குறிப்பர். நடு கல்லின் மேல் பகுதியில் இரண்டு மாடுகள் ஏர் உழுவதைப் போலக் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த நடுகல்லில் காட்டப் பட்டவன் ஒரு குடியானவத் தலைவனாக இருந்திருத்தல் வேண்டும். அவன் மறைவிற்காக எடுத்த நடுகல்லாக இருக்க வேண்டும்.

அடுத்துக் காணப்படுவது புலிக்குத்திப் பட்டான் கல். வீரன் ஒருவன் கத்தியால் புலியின் வாயில் குத்துவது போல நேரடியாகப் புலியோடு சண்டையிடுவது இயற்கையாக வடிக்கப் பட்டுள்ளது. தனது வலது கையில் அம்பு ஒன்றை வைத்துள்ளதைக் காணலாம். வேட்டைக்குச் சென்ற வீரன் புலியுடன் போரிட்டு வீரசுவர்க்கம் அடைந்தான். அவன் நினைவாக அமைக்கப்பட்ட நடுகல் இது.

பல்வேறு சிறப்புகளைக் கொண்ட இவ்வூர் காலத்தாலும் சிற்பத்தாலும் கட்டடக் கலையாலும் கி. பி. 14-15-ஆம் நூற் றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று கருதலாம்.

# 9 ஆறிகம்பேடு கல்வெட்டு

**சீ. இராமச்சந்திரன்**
கல்வெட்டாய்வாளர்

ஆறிக்கம்பேடு என்ற ஊர், திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம் வெள்ளானூர் ஊராட்சியிலடங்கிய ஊராகும். இவ்வூரில் திரு. சுந்தரராஜன் என்பவர்க்குரிய நிலத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்ட தூண் உள்ளது. தொல்லியல்துறை கல்வெட்டுச் சிற்றெழுத்தர் திரு. பெ. முருகேசன் அளித்த தகவலின் அடிப்படையில் இக்கல்வெட்டு தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், சென்னைக் கல்வெட்டாய்வாளர் சீ. இராமச்சந்திரன், கல்வெட்டு படிப்பவர் க. ஈஸ்வரன், பெ. முருகேசன் ஆகியோர் அடங்கிய குழுவால் படியெடுக்கப்பட்டது. சென்னைத் தலைமையலுவலக நிழற்படக்காரர் மு. த. ஸ்ரீதரன் நிழற்படங்கள் எடுக்கும் பணியை மேற்கொண்டார்.

இது தரைமட்டத்துக்கு மேல் 95 செ.மீ. உயரமும், 43 செ.மீ. அகலமும் 27 செ.மீ. கனமும் கொண்ட ஒழுங்கற்ற கல்தூண் ஆகும். தரைமட்டத்துக்குக் கீழ் 50 செ.மீ. புதைத்து நிறுத்தப் பட்டிருக்கலாம். தரைமட்டத்துக்கு மேல்தான் கல்வெட்டு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பகுதி உள்ளது. கல்வெட்டுத் தூணில் மூன்று புறங்களில் தனித்தனியாக வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒருபுறம் வெறுமையாக விடப்பட்டுள்ளது.

**கல்வெட்டு வாசகங்களாவன :**

**பக்கம் 1**

1. ஹ[ர]வ வருஷ
2. ம் . . . . . . கி
3. ஷ்ண நாயக்க
4. ற்க்கும் திரு
5. மலை நாய
6. க்கற்கும் தற்ம
7. மாக திருமு[ல்]*லை வ
8. ாசலுடைய நயி

**பக்கம் 2**

9. னார்[க்]*கு உ
10. பைய்ய . . .
11. . . . . . .
12. . . . . . ஆடி

13. திருநாளுக்
14. கு விட்ட ஆறி
15. கம் பட்டு ச
16. ன்திறாதித்த
17. வரை ந
18. டக்சு கடவ
19. தாக . . .

**பக்கம் 3**

20 இதுக்கு அ[கி]
21. தம் பண்ணின
22. வன் உண்டானால் க
23. ங்கைக் கரை
24. யில் காரான் பசு
25. வைக் கொன்ற
26. தோஷத்திலே
27. . . . . . .

**கல்வெட்டு பற்றிய விளக்கம்**

இக்கல்வெட்டு பவ வருடத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்தமைதி கி.பி. 17-ஆம் நூற்றாண்டுக்குரியதாக இருப்பதால் கி.பி. 1634 அல்லது 1694 எனக் கொள்ளலாம். 1694-ஐ விட 1634 பொருத்தமாகத் தோன்றுகிறது. காரணம், இக்கல்வெட்டில் கிருஷ்ண நாயக்கர், திருமலை நாயக்கர் ஆகிய இரு நாயக்க அரசர்களின் பெயர் இடம் பெற்றுள்ளது. ஆறிக்கம்பேடு சென்னை நகரையொட்டி அமைந்துள்ள ஊராகும். 17-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் சென்னை, காஞ்சிபுரம் மாவட்டப் பகுதிகள் ஆலம் கீர்பாதுஷா (ஔரங்கசீப்) ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்டன. தக்காண சுபேதார் (பின்னாளைய ஹைதராபாத் நிஜாம்) ஒருவர் மொகலாய அரசப் பிரதிநிதியாக இப்பகுதிகளை நிர்வகித்து வந்தார். சென்னையில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கும்பினி வலிமை யாக வேரூன்றிவிட்டது. எனவே, நாயக்க மன்னர்களின் நேரடி ஆட்சி நடந்த காலகட்டமாகிய கி.பி. 1634-ஆம் ஆண்டே இக்கல்வெட்டுக்குப் பொருத்தமானதாகும்.

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் இரு நாயக்க அரசர்கள் கிருஷ்ண நாயக்கர் மற்றும் திருமலை நாயக்கர் ஆகலாம்.[1] இவர்கள் முறையே செஞ்சி, மதுரைப் பகுதிகளை ஆண்டு வந்த அரசர்கள் ஆவர். செஞ்சிப்பகுதியை இக்காலகட்டத்தில் ஆண்டு வந்த கிருஷ்ணப்ப நாயக்கரும் மதுரை அரசர் திருமலை நாயக்கரும் வீழ்ச்சியடைந்து விட்ட விஜயநகர அரசின் மேலாண்மையை உதறி விட்டுச் சுயாட்சி எய்தியதோடு, தஞ்சை நாயக்கர்க்கு எதிராகவும் அணி சேர்ந்திருந்தனர். இத்தகைய சூழ்நிலையில் இவ்விரு அரசர் களும் இணைந்து சென்னையையடுத்துள்ள திருமுல்லைவாசல்

சிவன் கோயிலுக்கு ஆடித்திருநாள்விழாச் செலவுகளுக்காக ஆறிக்கம்பேடு கிராமத்தைக் கொடையாக வழங்கியுள்ளார்கள் என நாம் இக்கல்வெட்டின் மூலம் அறிந்து கொள்கிறோம். ''செஞ்சி அழிந்து சென்னை தோன்றிற்று'' என்பது பழமொழியாகும். சென்னை நகரம், சந்திரகிரி நாயக்கரால் கி. பி. 1639-இல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினிக்கு வழங்கப்பட்டது. அதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்னர் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டில் செஞ்சியரசர் கிருஷ்ணப்ப நாய்க்கர் மற்றும் மதுரையரசர் திருமலை நாயக்கர் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பான செய்தியாகும்.

''ஆறிகம்பட்டு'' என்றே இவ்வூர்ப் பெயர் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. இது ''ஆரியன் பற்று'' என்பதன் திரிபாகலாம். ஆரியப்படை, ஆரியப்பொருநன் போன்ற பழந்தமிழ் வழக்குகளும், தொம்பர் இனத்தவர் ஆரியர் என்ற பெயரில் அழைக்கப்படுவதும் இது தொடர்பாகக் கவனத்துக்குரியவை.

## துறை நிகழ்வுகள் (ஆகஸ்ட் மாதம்)

23-8-2004 அன்று ஆகஸ்ட் மாதத் திங்கட்பொழிவு தொல்லியல் துறை சிறப்பு ஆணையர், திரு. தி. ஸ்ரீ, ஸ்ரீதர், இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் திருமிகு. ஐராவதம் மகாதேவன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் ''முந்து தமிழ்க் கல்வெட்டுகள்''- ஆய்வு என்ற தலைப்பில் உரையாற்றினார்கள்.

23-8-2004, 24-3-2004 ஆகிய நாட்களில் தொல்லியல் துறையின் தொழில் நுட்ப அலுவலர்களின் பணிகளைச் சிறப்பு ஆணையர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். துறையில் பணி முன்னேற்றம் குறித்த கலந்துரையாடல்களுக்குப் பின்னர் கல்வெட்டு படியெடுத்தல் முனைப்புத்திட்டம், கல்வெட்டுகளை பதிப்பித்து வெளியிடுதல், அகழாய்வு அறிக்கை வெளியிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டன.

# 10 குத்தம்பாக்கம் கல்வெட்டுகள்

ச. கிருஷ்ணமூர்த்தி,
தொல்லியல் அலுவலர்.

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி வட்டத்தில் திருமழிசை-திருவள்ளூர்ச் சாலையில் வெள்ளவேட்டுக்கு அருகில் குத்தம்பாக்கம் என்ற ஊர் உள்ளது. காஞ்சிபுரம் நெடுஞ்சாலை வழியாகவும், இவ்வூரை அடையலாம். தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் தலைமையில் 3-9-2004 அன்று இவ்வூரில் கல்வெட்டு ஆய்வு மேற் கொள்ளப்பட்டது[1].

இவ்வூரில் ஊரின் தெற்கே துறையாத்தம்மன்கோயில் என்ற பெயரில் தற்போது வழங்கப்படும் சிவன் கோயில் ஒன்றும், ஊர் நடுவில் திரிபுராந்தகர்கோயில் என வழங்கப்படும் சிவன் கோயில் ஒன்றும், துறையாத்தம்மன் கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம். ஆகியவற்றில் 7 கல்வெட்டுகள் உள்ளன. இவை முழுமையாக உள்ளன. திரிபுராந்தகர் கோயிலில் திரிபுரசுந்தரி என வழங்கப் படும் அம்மன் சன்னிதியின் கருவறை, முன் மண்டபம் ஆகியவற்றில் 13 கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் துண்டுக் கல்வெட்டுகளாகும். இக்கல்வெட்டுகள் இதுவரை படி யெடுக்கப்படாத கல்வெட்டுகளாகும். இவ்விருகோயில்களுள் திரிபுராந்தகர் கோயில் வழிபாட்டிலுள்ளது. துறையாத்தம்மன் கோயில் இன்று வழிபாடின்றி உள்ளது. கல்வெட்டுகள் அனைத்தும் மூன்றாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் இராஜராஜன் ஆகிய பிற்காலச் சோழ அரசின் இறுதிப் பகுதி அரசர்களுடைய காலத்தைச் (கி.பி. 1178-1260) சேர்ந்தவை.

**துறையாத்தம்மன் கோயிற் கல்வெட்டுகள் குறிப்பிடும் செய்திகள்:**

1) அர்த்தமண்டப வடபுறச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டே, இக்கோயிற் கல்வெட்டுகளுள் முதலிற் பொறிக்கப்பட்ட கல்வெட்டாக இருக்கலாம். இது, திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவீர ராஜேந்திர சோழ தேவரின் 13-ஆவது ஆட்சியாண்டில் பொறிக்கப் பட்டுள்ளது. வீரராஜேந்திர சோழன் என்பது மூன்றாம் குலோத் துங்கனின் வேறு பெயராகும். தொண்டை மண்டலத்துக்குச்

சோழராட்சிக் காலத்தில் சூட்டப்பட்ட பெயராகிய ''ஜயங்கொண்ட சோழ மண்டலம்'' என்ற பெயரும், ''புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டு மாங்காடு நாட்டுக் குத்தன்பாக்கம்'' என்ற கோட்டம், நாடு மற்றும் ஊர்ப் பெயரும், குறிப்பிடப் படுகின்றன, குத்தன் என்பது குப்தன் என்ற சொல்லின் தமிழ்த் திரிபாகும். இது வணிகர்க்குரிய பட்டப் பெயராகத் தமிழ்க் கல்வெட்டுகளிற் குறிப்பிடப்படுகிறது. பாக்கம் என்பது கடற்கரை ஊர் அல்லது பட்டினம் சார்ந்த ஊரைக் குறிக்கும். குத்தன்பாக்கம் என்ற இவ்வூர், மயிலாப்பூர் போன்ற பழைய துறைமுக நகர் ஒன்றினைச் சார்ந்து அமைந்திருந்த வணிகர் ஊராக இருந் திருக்கலாம். கோயில் இறைவன் பெயர், இக்கல்வெட்டில் ''உடை யார் திருவையாறுடைய நாயனார்'' எனக் குறிப்பிடப்படுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் செய்தியாவது : வளையம் அழகி யான் ஒற்றி அரசன் என்ற பெயரும் குலோத்துங்க சோழப் பையூர் நாடாழ்வான் என்ற பட்டப்பெயரும் உடைய ஒருவன், நந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு முப்பத்திரண்டு பசுவும் ரிஷபம் (காளை) ஒன்றும் இக்கோயிலிற் பூசைப் பணிபுரியும் காணி (உரிமை) உடைய சிவப்பிராமணர் வசம் வழங்கினான்.

2) கருவறை தென்புற அதிட்டானச் சுவரில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனின் 22-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ''ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் குலோத்துங்க சோழ வளநாட்டு மேன் மாங்காடு நாட்டுக் குத்தன்பாக்கத்து உடையார் திருவையாறுடையார்'' என்று இவ்வூர் அமைந்துள்ள நாட்டுப் பிரிவு, ஊர்ப் பெயர், கோயில் இறைவன் பெயர் ஆகியன குறிப் பிடப்படுகின்றன. இதே மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டு ஐஞ்சூர் முல்லைப் பாடியைச் சேர்ந்த திருச்சுரக் கண்ணப்பன் ஆதிநாயகன் பஞ்சநதிவாணன் ராஜராஜ நீல கங்கரையன்[2] என்பவன் இக்கோயிலில் திருநந்தா விளக்கு ஒன்றரை வைத்து அதனை எரிப்பதற்குரிய நெய்க்காக நாற்பத் தெட்டு பசுக்களும் ஒரு ரிஷபமும் வழங்குகிறான்: மேலும் தயிரமுது படைப்பதற்காக மூன்று பசுக்களும் வழங்கியிருக்கின்றான். இப் பசுக்களையும் ரிஷபத்தையும் பராமரிக்கும் பொறுப்பினை, மன்றாடி உய்யவந்தான், கண்ணப்பன் ஏறன் மகன் திருமுத் . . . திருக் கோயிலான் வண்டுவராபதி . . . நாயக்க கோன் ஆகியோர் ஏற்றனர்; தினமும் விளக்குக்கு உழக்காழாக்கு நெய்யும் தயிரமுதுக்கு ஒரு நாழித்தயிரும் வழங்க ஒப்புக் கொண்டனர்.

3) கருவறை வடபுறச்சுவரில் பொறிக்கப்பட்டுள்ள இம் மன்னனின் 30-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் இதே போன்ற செய்தியைக் கூறுகிறது.

4) கருவறைத் தென்புற அதிஷ்டானத்தில் பொறிக்கப் பட்டுள்ள ஒரு கல்வெட்டு, அரசன் பெயரின்றித் "திரிபுவனச் சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான்" எனத் தொடங்குகிறது. இவ்வாறு ஓர் ஆவணம் தொடங்கினால் அது அரசனின் நேர்முக ஆணை எனப்பொருள்படும். இக்கல்வெட்டின் எழுத்தமைதியும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக்குரியதே யாதலால் இக் கல்வெட்டு அம்மன்னனின் ஆணைப்படி பொறிக்கப்பட்டது எனக் கொள்ளலாம், வற்ஸராயன்[3] என்ற அதிகாரி இக்கோயிலுக்கு, இந்நாட்டுப் பூந்தமல்லியில் தூணி அளவு கொண்ட நிலத்தினை இறையிலியாக வழங்க வேண்டும் என்று அரசனுக்குக் கோரிக்கை விடுத்தபடி தனது 32-ஆவநு ஆட்சியாண்டு முதல் அவ்வாறே அரசனும் நிலம் வழங்கினான்.

5) திரிபுராந்தகர் கோயில் திரிபுரசுந்தரி சன்னிதியிற் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் அனைத்தும் முழுமையற்ற கல்வெட்டுகளாகும். திருவையாறுடையார் என்ற பெயர் இக் கல்வெட்டுகளில் காணப்படுவதால் அக்கோயிலுக்கு (துறையாத் தம்மன் கோயிலுக்கு) உரிவையாக இருந்திருக்கலாம். "சோமீசுர முடையான்" என்ற பெயரும் ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது. இக்கல்வெட்டுகளும் மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் காலத்தைச் சேர்ந்தவையே. இச்சன்னதி முன் மண்டபக் கிழக்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் இராஜராஜன் கல்வெட்டில், நாரசிங்கதேவரான யாதவராயன் என்ற அதிகாரியின் பெயர் காணப்படுகிறது. யாதவராயன் என்ற பட்டப் பெயர் கொண்ட அதிகாரிகள் சோழராட்சி முடிவுற்ற பின்னர், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியைச் சுயேச்சை யாக ஆண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதே சுவரில் பொறிக்கப் பட்டுள்ள மற்றொரு முழுமையற்ற கல்வெட்டு, இந்தக் கோயிலுக்கு நிவந்தமாக மாத்தூர் என்ற ஊரில் பத்து வேலி நிலம் வழங்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடுகிறது. இச்சன்னிதிக் கருவறை வடசுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு திருச்சுரக்கண்ணப்பன் ஆதி நாயகன் ராஜராஜ நீலகங்கரையனைக் குறிப்பிடுகிறது. ஆயம் வெட்டி, அரிமுக்கை, முதலிய வரியினங்கள் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன. மாத்தூர் என்ற ஊர், பூந்தமல்லியின்

வடக்கிலிருந்ததாகவும், திருவையாற்று விளாகம் என்ற பெயரில் பூந்தமல்லியில் நிலம் இருந்ததையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இதற்கருகிலுள்ள மற்றொரு கல்வெட்டு, அரும்பாக்கத்தைக் குறிப்பிடுகிறது.

இவ்வாறு, இவ்வூரில் கண்டறியப்பட்ட கல்வெட்டுகள் மூலம் இப்பகுதி சார்ந்த வரலாற்றுச் செய்திகள் தெரிய வருகின்றன.

அடிக்குறிப்புகள்

1) துறையின் நிழற்படக்காரர் திரு. திருஞானசம்பந்தன் தெரிவித்த செய்தியின் அடிப்படையில் இவ்வூர்க் கல்வெட்டுகள் ஆய்வு செய்யப்பட்டன.

2) நீலகங்கரையன் என்ற பட்டப் பெயரைப் பரம்பரையாகச் சூடிவந்த அதிகாரிகள் இப்பகுதியில் பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தில் இருந்துள்ளனர். நீலாங்கரை என்ற ஊர்ப்பெயர் இத்தொடர்பில் உருவானதாகலாம்.

3) வத்ஸராஜன் அல்லது வத்தராயன் என்ற பட்டப் பெயரின் திரிபு. பழந்தமிழிலக்கியமான பெருங்கதையில் குறிப்பிடப்படும் உதயணன் ''வத்தவர் கோமான்'' ஆவான்.

## துறை நிகழ்வுகள்

18-8-04 சென்னைக்கு தென்மேற்கே 45 கி.மீ. தொலைவில் உள்ள மலைப்பட்டு என்ற ஊரில் உள்ள மலைப்பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டன. இப்பகுதியில் உள்ள பெருங்கற்காலச் சின்னங்கள், கல்வெட்டுகள் சிறப்பு ஆணையர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு மேலும் இப்பகுதியை முழுமையாக ஆய்வு செய்யும்படி அறிவுரை வழங்கப்பட்டது,

2-9-04 கோயம்பேடு, ஆறிகம்பேடு ஆகிய இடங்களில் சிறப்பு ஆணையர் தலைமையில் சென்று, கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன.

4-9-04 காஞ்சீபுரம் மாவட்டம், விட்டலாபுரம், விட்டல் கோயிலில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகள் சிறப்பு ஆணையரால் ஆய்வு செய்யப்பட்டது. பணிகளின் மேம்பாட்டிற்கும், கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களை படியெடுப்பதற்கும் அறிவுரை வழங்கப்பட்டது. மேலும் இப்பகுதியில் உள்ள வரலாற்றுச்சின்னம் ஆலம்பறைக் கோட்டையும் ஆய்வு செய்யப்பட்டது.

# 11 வரலாற்றுச் சின்னங்களைப் போற்றுவோம்

(கல்வெட்டு இதழ் - 63-ன் தொடர்ச்சி)

### 6. சிவன் கோயில் - சிவன் கூடல்

இவ்வூர் காஞ்சீபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ளது. சென்னை - காஞ்சீபுரம் நெடுஞ்சாலையில் பிள்ளைச்சத்திரத்திற்கு அருகில் வடக்கே சுமார் 10 கி.மீ. தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது.

சோழர் காலத்திய தொன்மை மிக்க ஊராக இவ்வூர் திகழ்கிறது. இவ் வூரைச் சிவன்கூடல் என்றும், இங்கு கோயில் கொண்டுள்ள இறைவனை சீவக் கொழுந்தாண்டார், சிவக்கொழுந்தீசுவரர் என்றும் கல்வெட்டுகள் குறிப்பிடு கின்றன. முதலாம் இராஜேந்திரனின் 3-ஆம் ஆட்சியாண்டின் கல்வெட்டு மிகவும் பழமையானது. மேலும் முதலாம் குலோத்துங்கசோழன், விக்கிரமசோழன் காலக் கல்வெட்டுகளில் நிலக் கொடை மற்றும் நில விற்பனை பற்றிய செய்திகள் குறிப்பிடப்படுகின்றன. விக்கிரமசோழன் காலத்தில் இக்கோயில் விமானம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 13-ஆம் நூற்றாண்டில் இங்கு மரகதவல்லி நாச்சியார் என்ற அம்மன் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இதற்கு விஜயகண்ட கோபாலன் என்ற மன்னன் கொடையளித்துள்ளான்.

சீரமைப்பு பணியின் போது கிடைத்த கி.பி.9-ம் நூற்றாண்டைச் சேர்ந்த மணற் கல்லால் ஆன ஜேஷ்டை சிற்பம் பாதுகாப்பின் பொருட்டும், இரசாயனக் கூடத்தில் தூய்மை செய்வதற்காகவும் தலைமை அலுவலகம் எடுத்து வரப் பட்டுள்ளது.

1. மகாமண்டபம் சேதமடைந்த சுவர்களை, ஆங்காங்கே உள்ள கருங்கற்களை சேகரித்து உரிய இடத்தில் அமைத்து தேவைப்பட்டால் புதிய கற்கள் வைத்து மீண்டும் கட்டுதல்.
2. மகாமண்டபத்தின் நுழைவாயில் கதவின் மேல் மற்றும் பக்க கருங்கல் அமைப்புகள் புதியதாக மாற்றுதல்.
3. மண்டப தளத்தின் ஒரு பகுதியில் இல்லாமல் உள்ள கருங்கல் பலகைகளை புதியதாக அமைத்தல்.
4. தளத்தில் மேல் செங்கல், சுண்ணாம்பு கலவை அமைத்தல். தள ஓடுகள் அமைத்தல்
5. நாட்டு மரத்தினால் செய்யப்பட்ட புதிய நுழைவாயில் கதவு அமைத்தல்.
6. மணற்கற்களினால் அமைக்கப்பட்ட சிறிய கோயிலை பிரித்து கட்டுதல்.

## 7. மகாதேவர் கோயில் - இடையார்பாக்கம்

சென்னை - காஞ்சீபுரம் சாலையில் உள்ள சுங்குவார்ச் சத்திரத்திலிருந்து திருவள்ளூர் செல்லும் சாலையில் 20 கி.மீ. தொலைவில் இடையார்பாக்கம் உள்ளது. ஊரின் மேற்கே ஏரிக் கரையில் உள்ள சோழர் காலத்திய சிவன் கோயில், தொண்டை மண்டலத்திற்கே சிறப்பானதொரு கட்டட அமைப்பான தூங்கானை மாட வடிவத்துடன் அமைந்து விளங்குகிறது. இது கருவறை மற்றும் அர்த்த மண்டபத்துடன் கூடிய கோயிலாகும். இதன் விமானம் இரு தள அமைப்புடையது. அதிட்டானம் முதல் கபோதகம் வரை கருங்கல்லாலும், மேலே விமானப்பகுதி செங்கற்களாலும் எடுக்கப்பட்டுள்ளது. கருவறையின் தேவகோட்ட மாடங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, பிரம்மா, துர்க்கை ஆகிய அழகிய சிற்பங்கள் காட்சி தருகின்றன.

இக்கோயிலில் முதல் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்த மூன்று கல்வெட்டுகளும், இரண்டாம் ராஜராஜன் காலக் கல்வெட்டு ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோயில் முதற்குலோத்துங்க சோழன் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டுமெனக் கல்வெட்டுகளாலும், கட்டடக்கலை அமைப்பாலும் அறிய முடிகிறது. இக்கோயில் சந்திரசேகரன் ரவி என்ற 'சோழேந்திர சிம்ம ஆசாரி' என்ற சிற்பியினால் கட்டப்பட்டது என்ற செய்தியைக் கல்வெட்டால் அறிகிறோம். இறைவன் திருப்பாதகாடுடையார் என அழைக்கப் படுகிறார். கல்வெட்டுகளில் இவ்வூர் 'இடையாற்றுப்பாக்கம்' எனவும், 'ராஜ வித்யாதர சதுர்வேதி மங்கலம்' என்றும் குறிக்கப்படுகிறது. இவ்வூர் ஜெயங் கொண்ட சோழ மண்டலத்தில் மணவிற் கோட்டத்துப் புரிசை நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது என்பதையும் அறிகிறோம்.

1. கோயிலின் சேதமடைந்த இடம் பெயர்ந்த கற்களை பிரித்து ஆங்காங்கே உள்ள கற்களை சேகரித்து உரிய இடத்தில் அமைத்து தேவைப்பட்டால் புதிய கற்களை வைத்து மீண்டும் கட்டுதல்.
2. கோயில் நுழைவாயில் கீழ்படிக்கற்கள் புதியதாக மாற்றுதல்.
3. கோயிலின் தரைகற்களை பெயர்த்து சமமான, மேல் அமைப்புகள் அமைக்க dressing செய்து மீண்டும் அமைத்தல்.
4. தளத்திற்கு புதிய கருங்கல் பலகை அமைத்தல்.
5. நுழைவாயிலின் படிக்கற்கள் புதியதாக அமைத்தல்.
6. கோயிலை சுற்றி சேதமடைந்த இரும்பு 'ட' கம்பங்களை அகற்றி புதியதாக இரும்பு கம்பங்கள் அமைத்து இரும்பு முள் வேலி அமைத்து வர்ணப் பூச்சு பூசுதல்,

## 8. கங்கைகொண்ட சோழீசுவரர் கோயில் - கூழம்பந்தல்

காஞ்சீபுரம் வந்தவாசி செல்லும் பாதையில் 22 கி.மீ. தொலைவில் கூழம்பந்தல் என்ற சிற்றூர் உள்ளது. கல்வெட்டுக்களில் இவ்வூர் 'கங்கை கொண்ட சோழபுரம்' என்றும், 'விக்கிரம சோழபுரம்' என்றும் குறிக்கப்படுகிறது. இக்கோயில் கங்கைகொண்டசோழீச்சுரமுடையார் கோயில் என அழைக்கப் படுகிறது. முதலாம் இராஜேந்திர சோழனுடைய 22-வது ஆட்சி ஆண்டில், அவனுடைய குருவான ஈசான சர்வசிவ பண்டிதரால் இக்கோயில் கற்றளியாக கட்டி முடிக்கப்பட்டது, கிழக்கு நோக்கிய இக்கற்றளி திரிதள விமானத்தைக் கொண்டுள்ளது. அர்த்த மண்டபமும், முக மண்டபமும் எழிலுடன் விளங்கு கின்றன. இதனை அடுத்துள்ள மகாமண்டபம் கூரையின்றித் தூண்களுடன் உள்ளது. வாயிலில் அழகிய துவாரபாலகர் சிற்பங்கள் காட்சி தருகின்றன. கருவறை தேவகோட்டங்களில் கணபதி, பிட்சாடணர், தட்சிணாமூர்த்தி, அரிகரன், திருமால், லிங்கோத்பவர், சுப்ரமணியர், பிரம்மா, துர்க்கை ஆகிய சிற்பங்கள் காட்சி தருகின்றன. கங்கைகொண்ட சோழீச்சுரமானது ஜெயங் கொண்ட சோழ மண்டலத்து காலியூர் கோட்டத்து பாகூர் நாட்டு கங்கை கொண்ட சோழபுரத்தில் இருப்பதாக கல்வெட்டு குறிப்பிடுகிறது. முதல் இராசேந்திரன் கிருஷ்ணதேவராயர் ஆகியோர் கால கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன.

1. மூலஸ்தானத்தில் மரக்கூரை புதுப்பித்தல்.
2. முக மண்டபம் மற்றும் கல்யாண மண்டபத்தில் மேடு பள்ளமாக உள்ள கருங்கல் தரையை சமதளமாக சரி செய்தல்.
3. மூலஸ்தானத்தில் முகப்பில் கோயில் கதவு பொருத்துதல், பக்கவாட்டில் கிரில் கதவு பொருத்துதல்.
4. கல்யாண மண்டபத்தின் இடிந்து போன சுற்றுச் சுவரை செங்கல் மற்றும் சிமெண்ட் சுண்ணாம்பு கலவை கொண்டு திரும்ப கட்டுதல்.
5. கோயில் மேற்கூரையில் உள்ள கசிவுகளை செங்கல் ஜல்லி மற்றும் சுண்ணாம்பு கலவை மற்றும் மிஷின் சதுரபில்லை ஓடு கொண்டு சரி செய்தல்.
6. கோயிலுக்கு கிராவல் கொண்டு அணுகுசாலை அமைத்தல்.

வரலாற்றுச் சின்னங்கள் தொகுப்பு : **பாதுகாப்புப் பிரிவு**

— தொடரும்

# 12 கோயம்பேடு கல்வெட்டுகள்

ச. கிருஷ்ணமூர்த்தி, தொல்லியல் அலுவலர்
சீ. இராமச்சந்திரன், கல்வெட்டாய்வாளர்

சென்னை நகரப் பேருந்து நிலையம் அமைந்துள்ள இடம் கோயம்பேடு. திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் வட்டத்தில் அடங்கிய இவ்வூரின் வடபகுதியில் குறுங்காலீசுவரர் கோயில் எனப்படும் சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலில் உள்ள மொத்தம் 14 கல்வெட்டுகளின் குறிப்புகள் இந்தியக்கல்வெட்டு ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன இவற்றின் வாசகங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை[1] 2-9-04 அன்று தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இ. ஆ. ப. அவர்கள் தலைமையில் இக்கோயிற் கல்வெட்.டுகள் படியெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.[2]

இக்கோயிற் கல்வெட்டுகளின் மூலம், மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இக்கோயில் கற்றளியாகக் கட்டப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. இக்கோயில் அதற்கு முன்னரே செங்கற்கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்பது சில சிற்பங்களால் தெரியவருகிறது. இங்குள்ள பல்லவர் ஆட்சியின் இறுதிக் காலத்தைச் சேர்ந்தனவாகக் கருதத்தக்க சூரியன், சண்டிகேஸ்வரர் பிரம்மசாஸ்தா (முருகன்) ஆகிய சிற்பங்கள் கலை நேர்த்தி மிக்கவை.

கல்வெட்டுகளில் இக்கோயிலின் பெயர் குறுங்காலாண்டார் எனக் குறிப்பிடப்படுகிறது. இக்கோயிலின் அமைப்பும் பெரும்பாலான சிற்பங்களின் வடிவமும் சிறியவையாக (குறுகிய வடிவில்)க் காட்சியளிக்கின்றன. எனவே இந்த வடிவத்துக்கும் இப்பெயருக்கும் தொடர்பிருக்கலாம்.

“ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டு மாங்காடு நாட்டுக் கோயம்பேடு” என்பனவே இவ்வூரின் பெயரும் இவ்வூர் அமைந்துள்ள நாட்டுப் பிரிவின் பெயருமாகும். .கோவன், கோயன் என்ற பெயர்கள் பசுக்களை மேய்ப்போன் அல்லது ஆயன் எனப் பொருள்படும் சொற்களாகும். பேடு அல்லது பேட்டை என்பது குடியிருப்பைக்

குறிக்கும். இவ்வூர்க் கல்வெட்டுகள் சிலவற்றில் கோயிலில் விளக்கு எரிப்பதற்குரிய நெய்க்காகப் பசுக்கள் வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்கனின் 28-ஆவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1206), வெள்ளாளன் பூந்துழான் ஆட்கொண்டநாயகன் என்பவன் சந்தி விளக்கு ஒன்றும், வெள்ளாளன் ஈரடி வைத்தானான . . . ன குனித்தான் ஒரு சந்தி விளக்கும் எரிப்பதற்காகப் பசுக்கள் வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகிறது. மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் தான் இவ்வூரும் கோயிலும் மிகச் சிறந்த நிலையில் இருந்துள்ளன என்பது இக்கல்வெட்டுகளால் தெரிய வருகிறது.

விஜயநகர அரசர் வீர பொக்கராயரின் பார்த்திப வருட (கி.பி.1346-ஆம் ஆண்டுக்குரிய)க் கல்வெட்டு, விற்குடி சூரியக்கோன் மகன் காரிக்கோன் என்பவனை இக்கோயிலில் திருவிளக்குக்குடி எனப்படும் விளக்கெரிப்பதற்கு நெய் வழங்கும் பொறுப்பை ஏற்று ஆடுமாடுகளைப் பராமரிப்பவனாக நியமித்து ஆணை வழங்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு விளக்கெரிப்பதற்காகப் பசுக்கள் வழங்கும் கொடையைக் குறிப்பிடாமல், திருவிளக்குக்குடி களாக ஆயர்களை நியமிக்கும் மரபைக் குறிப்பிடுவதன்மூலம், காலப் போக்கில் நிகழ்ந்த சமூக மாற்றங்களை அறியமுடிகிறது.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியைச் சேர்ந்த எழுத்தமைதியுடன் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீரங்கநாத இயாதவ ராயர் என்ற அரசனின் கல்வெட்டும் இக்கோயிலிற் பொறிக்கப் பட்டுள்ளது. இம்மன்னன் கி.பி. 1336-37-இல் இப்பகுதியில் சுயேச்சையாக ஆட்சியமைத்ததாகக் கல்வெட்டு ஆண்டறிக்கை குறிப்பிடுகிறது[3] இக்கல்வெட்டு இம்மன்னனின் 16-ஆம் ஆட்சி யாண்டைச் சேர்ந்ததாகையால் இக்கல்வெட்டு கி.பி.1352-1353-ஆம் ஆண்டுக்குரியதெனலாம். இக்கல்வெட்டில் நடுவில் மண்டலத்துத் திருமுனைப்பாடிநாட்டுத் திருநாவலூர் நாவலூராளுடையான் முதலிப்பிள்ளை சூரியதேவன் என்பவர் “திருசன்திர விளக்கு” (திருச் சந்தி விளக்கு) வைக்கப் பசுவும் கன்றுகளும் வழங்கியுள்ளார்.

கோயம்பேட்டைச் சேர்ந்த கருப்புழான் வடுகநாதன் என்பவ னின் அகமுடையாள் தேவாண்டையாள் என்பவள் மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தைச் சேர்ந்த இருகல்வெட்டுகளிற் குறிப்பிடப்படுகிறாள். அவ்வரசனின் 34-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இவள், இறைவர்க்குரிய திருமஞ்சனத்திற்காக ஒரு

கிணறு தோண்டுவித்த செய்தியும், 37-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் நந்தவனப்பட்டிக்காக நிலம் வழங்கிய செய்தியும் குறிப்பிடப்படுகின்றன.

இவ்வூரைச் சேர்ந்த சேரிப்பேரையன் மகன் பள்ளி ஆண்டானான திருஞானசம்பந்தன் என்பவர், மூன்றாம் குலோத்துங்கனின் 25-ஆவது ஆட்சியாண்டில் இக்கோயிலில் சந்தி விளக்கு (பகலும் இரவும் சந்திக்கும் பொழுதில் எரிக்கும் விளக்கு) ஒன்று எரிப்பதற்காக, இரண்டு பசுவும் மூன்று கன்றும் ஆக, உரு ஐந்தினை இக்கோயிற் சிவப்பிராமணர் வசம் வழங்கியுள்ளார். இவ்வாறு சோழராட்சியின் இறுதிப் பகுதியில் இக்கோயில் மிகச்சிறந்த பராமரிப்பைப் பெற்றிருந்துள்ளது. இக்காலகட்டத்தையடுத்து 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜயநகர அரசர்களும் இக்கோயிலை ஆதரித்துள்ளனர்.

இக்கோயிலின் அம்மன் சன்னிதியின் திருச்சுற்றுச்சுவரில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு, இந்தியத் தொல்லியல் துறையால் படியெடுக்கப்படாததாகும். அக்கல்வெட்டு, மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சிக்காலத்தில் சிவஞான பட்டன் உள்ளிட்ட சிவப்பிராமணர்கள் சந்தி விளக்கு எரிப்பதற்குச் செய்த ஏற்பாட்டினைக் குறிப்பிடுகிறது.

இவ்வாறு இக்கோயிற் கல்வெட்டுகள் மூலமாக இப்பகுதியின் அரசியல்வரலாறு, சமூக வரலாறு போன்றவை தொடர்பான செய்திகள் தெரிய வருகின்றன. மேய்ச்சல் நிலமாகவும், விளை நிலமாகவும் இருந்த அன்றைய கோயம்பேடு இன்று பரபரப்பான நகரப்பகுதியாக மாறிவிட்டது என்பதும் புலனாகிறது.[4]

அடிக்குறிப்புகள் :

1. Annual Report on Epigraphy 1-14/1933-34.
2. துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனப் பயிற்றுநர் முனைவர் ஆ. பத்மாவதி மற்றும் பயிற்சி மாணவர்களும் இவ்வாய்வில் பங்கேற்றனர்.
3. Intro. 43, A.R.E. for 1933-34.
4. இக்கல்வெட்டாய்வு மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கிய இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர், மற்றும் உடனிருந்து உதவிய கோயிலின் நிர்வாக அலுவலர் திரு. என். தங்கையா ஆகியோர்க்கு நன்றி.

# 13 ARCHAEOLOGY AND TOURISM*

**T. S. Sridhar,** I.A.S.
Special Commissioner
Department of Archaeology

Tourism in today's world has been developed into a very important commercial activity in every country. It is the world's largest employing industry today. Indian tourism and travel industry has grown out to be a source of much interest among domestic as well as international tourist. The tourists have comprehensive reasons to visit places, for pleasure, recreation & adventure, cultural, religious, sports, social, business and educational interest.

The visit to culturally important places includes places of art, hereditary treasures, religious shrines, festivals and music, dance of various civilization. India being a highly populated country of diversified cultures, promotes cultural tourism as one of its main trade in the tourist industry. Archaeology being the study of ancient monuments, artefacts of the unknown past plays a vital role in defining an importance of a region. Apart from monuments the other archaeological finds like inscriptions, coins, sculptures, paintings serve as the important tool to assess the significance of a site concerning a nations archaeological heritage.

Cultural tourism in the statc of Tamilnadu has profoundly developed due to the fact there are many temples of high cultural significance. The temples of Tamilnadu are artistic, sacred and historically eventful.

Hence, the temple art and architecture constitute the splendid attraction to the tourist all over the world. There are various kind of monuments of tourist interest, in Tamilnadu. The monuments and Museums are the two major sources of attractions to the tourists in the case of cultural tourism. The rich heritage of Tamilnadu may be categorised as 1. Temple towns, like Kancheepuram, Srirangam, Kumbakonam, Madurai, etc., 2. Temple towns along the Tamilnadu coast, like Rameswaram, Tiruchendur, Kanniyakumari, Velankanni etc.,

Monuments and rich heritage areas - Mamallapuram, Poompuhar., 3. Temple towns on hill - Palani, Tiruttani. 4. Forts: Gingee, Tranquebar, Udaiyagiri, Kattabomman fort at Kamudi, Vellore 5. Water falls - courtallam, Hogennakkal, Rich cultural centres Chetinad, Karakudi, Madurai etc. 6. Hill Stations : Ooty and Kodaikanal.

Apart from monuments, museums play a vital role in the promotion of tourism. A visit to the museum gives the visitors a basic knowledge about the people, their culture, art and technology etc. of that region.

With a view to preserve the regional history of Tamilnadu, the Department of Archaeology is protecting 87 monuments spread all over Tamilnadu. These monuments either contain historical inscriptions or have high architectural & artistic value, and they throw light on the ways of our ancestors and their heritage. They provide a wealth of information for the reconstruction of the State's history.

The archaeologically important monuments of tourist interest of this department includes, Thirumalai Nayak Palace at Madurai, Danish fort at Tarangambadi, Udaiyagiri fort at Kanyakumari, Marrata palace at Tanjore, Ramalinga vilasam palace with its magnificent paintings, at Ramanathapuram, Minaret at Manora, Jain temples at Tiruparuthikundram, Kanchipuram and temples of both Saiva and Vaisnava sects and the archaeological vestiges of chola ruler Rajendra I at Gangaikondacholapurom, Swasthik Shaped Well-Tiruvellarai, Kattabomman fort at Kamudi are some of them.

There are thirteen site museum of the regional interest. The Pre-historic museum exclusively for the exhibits of the artefacts found in and around Poondi and in other parts of Tamilnadu, which also serves as the centre for the archaeological tourism. Other museums includes Dharmapuri museums with its exhibits of hero stones, Rajaraja Museum at Tanjore, with the display of antiquites of the Imperial cholas, Maratta museum at Tanjore, Ramalingavilasa museum of Sethupathi chieftains of 17th century CE.

There are laws enacted for the preservation and conservation of the monuments. The UNESCO has declared April 18th every year as "World heritage Day", India also observes this day every year, as day to create awareness among the public. The Government of India every year observing Heritage week from November 19-25th, which also coincides with the birth anniversary of the late Prime Minister Tmt. Indira Gandhi, as a commemoration of her love and concern for the historical and cultural monuments of India. These celebrations also promote tourism and bring lot of visitors both from India and abroad.

To promote archaeological tourism, it is necessary to carry out world wide publicity to attract the tourist, by providing audiocassettes, CD's and exploiting completely the electronic media such as TV, Radio and internet etc., The posters stating the significance of the monuments and museums and the special activities carried out in that area, can be created and pasted in the public places to attract the people.

**Archaeology**

Archaeology studies the story of man's past through his material remains. The word archaeology comes from the Greek word Archaios - Ancient and logos - theory or science.

Archaeology is essentially a method of reconstructing the past from the surviving traces of former societies. Both archaeology and history are concerned with the study of human past. Archaeology presents another method of approach to history, a study of human cultures through the material remains.

**Kind of activities**

"*Archaeology*" includes the different kinds of activities like 1. Epigraphical study 2. Archaeological exploration and excavation 3. Conservation of historical monuments and 4. Site museums.

Especialy '*historical mouuments*' have played an important role in the field of tourism development. Tourists from abroad are visiting our country to see and appreciate the architectural beauty of the monuments.

Historical monuments are being preserved by both Central and State Archaeology departments. The Archaeological Survey of India is protecting 3632 monuments all over India and state departments protecting approximately 3500.

Generally the monuments include :

1. Rock cut caves
2. Pre-historic paintings
3. Temples of different historical periods
4. Mosques
5. Churches
6. Palaces
7. Forts
8. Water tanks

Especially in Tamil Nadu, the State Archaeology department is protecting 87 historical monuments and more than 300 monuments being protected by Archaeological Survey of India.

**Epigraphy :**

Epigraphy is the pride of archaeology and consists the study of old inscriptions or engravings. The study of copper plate grants, manuscripts including paper and palm leaf manuscripts. Epigraphical details are more important and will throw more light on the history of the monuments. Some monuments are having famous inscriptions like rock edicts of the emperor Ashoka.

In Tamil Nadu Brahmi inscriptions found in and around Madurai and Karur, inscription at Uttiramerur and musical inscription at Kudumianmalai are some of the famous sites for epigraphy. Tourists are visiting these places for its historical epigraphical importance.

**Monuments Act :**

Both State and Central Governments have enacted '*Monuments Act*' to protect monuments against any vandalism.

Government of India had enacted "*Ancient Monuments and Archaealogical Sites and Remains Act - 1958*" to protect historical monuments. The Act provides the following powers to the Central Government.

a. to declare ancient monuments and sites to be of national importance
b. for the acquisition of rights in a protected monument
c. for the preservation, acquisition and maintenance of protected monuments
d. to acquire a protected area
e. to regulate archaeological excavation
f. to control moving antiquities

The Government of Tamil Nadu had enacted a similar Act during 1966 called as "Tamil Nadu Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Act 1966"

The Act provides the following powers to the State Government.

a. to declare ancient monuments and sites to of State importanee
b. for the acquisition of rights in a protected monument
c. for the preservation, acquisition and maintenance of protected monuments
d. to acquire a protected area
e to regulate archaeological excavation
f. to control moving antiquities
g. for restrictions on enjoyment of property rights in protccted areas

**World Heritage Sites :**

Some of the monuments in India are declared as World Heritage monuments by ICOMOS (International Council of Monuments and Sites), a wing of UNESCO.

The following monuments are declared as "World Heritage Monuments" in India.

1. Ajantha caves
2. Ellora caves
3. Agra fort
4. Taj Mahal - Agra
5. The Sun Temple, Konark
6. Mahabalipuram
7. Goa-Churches and Convents
8. Khajuraho
9. Hampi
10. Fatehpur Sikri
11. Pattadakal temple
12. Elephanta cave
13. Thanjavur Big temple
14. Gangaikondacholapuram temple
15. Dharasuram temple

Some of the sites are also preserved as *natural park* and *rock shelters* of Bhimbetka as cultural landscape site.

"*World Heritage Day*" is also celebrated in the month of **April 18th** to propagate the importance of the monument and attract more tourists. The Government of India every year observing "*Heritage week*" from **November 19-25th**, which also coincides with the birth anniversary of the late Prime Minister Tmt. Indira Gandhi, as a commemoration of her love and concern for historical and cultural monumente of India.

**Excavation**

Archeaological excavated sites like Saranath, Nagarjuna konda and others are attracting tourists for its historical importance. Chola palace site at Gangaikondacholapuram is also one of the important excavated palace site being protected by the State Department of Archaeology.

**Palaces and Forts**

Many palaces and forts are also attracting tourists for its historical importance. Jaipur palace, Padmanabhapuram palace, Sethupathy palace at Ramanathapuram, Maratta palace at Thanjavur, Tirumalai Naick palace, Madurai are some of the few palaces attracting many tourists.

**Site Museums**

The different kind of valuable artefacts are also kept in the museums for the public view. Museums are also important place to propogate our cultural heritage and attract many tourists. National Museum, New Delhi, Government Museum, Chennai, Salarjung Museum, Hyderabad are some of the important museums in India.

Thus Archaeology and Archaeology monuments have played vital role in promoting tourism in India.

* (Talk delivered at the Institute of Hotel Management, Catering Technology and Applied Nutrition, on 10.9.04)

**துறை நிகழ்வுகள்**

6-9-04 Special Commissioner delivered the inagural address at the workshop for training the trainers on "Preventive conservation of manuscripts" organised byGovt. Museum, Chennai and National mission for manuscripts, New Delhi.

8-9-04, 9-9-04 தர்மபுரி மாவட்டத்தில் அகழாய்வு மேற்கொள்ள உள்ள மோதூரில் சிறப்பு ஆணையரால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது புதிய கற்கால கருவி கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இங்கு காணப்படும் கல்வெட்டுகள் ஆய்வு செய்யபபட்டன. கோயிலூர், நல்லாம்பட்டி, பெரும்பாலை, செம்மனூர் ஆகிய ஊர்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. மல்லசமுத்திரத்தில் உள்ள பெருங்கற்காலச் சின்னங்களை பாதுகாக்கவும், தர்மபுரி அகழ்வைப்பகத்தை மேம்பாடு செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்ய சிறப்பு ஆணையரால் அறிவுறுத்தப்பட்டது.

# துறை நிகழ்வுகள்

10-9-04 Special Commissioner delivcred a talk on "Archaeology and Tourism" at the Institute of Hotel Management Catering Technology and Applied Nutrition, Chennai-113.

11-9-04 A Danish delegation comprising Dr. Carsten V. Larsen Director General, National Museum of Denmark; Esther Fihl, Associate Professor of Anthropology, University of Copenhagen and Dr. Martin Applet, co-ordinator on the National Museums Tranquebar and Ghana Initiatives met the Special Commissioner of Archaeology on 11-9-04. The basic purpose of their visit was to develop public awarness and knowledge of the Danish cultural heritage in Tarangampadi.

14-9-04, 15-9-04 - 2004-2005ஆம் ஆண்டு அகழாய்வுகள் மேற்கொள்வது குறித்த அனுமதியைப் பெறவும், மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறை மாமல்லபுரத்தில் ஆழ்கடலாய்வு மேற்கொள்ளும் போது இத்துறை பங்கேற்றல் குறித்தும்; மைசூரில் உள்ள கல்வெட்டுப்படிகளை பெற்று பதிப்பிப்பது குறித்தும்; பதிவு அலுவலர்கள் பதவி தொடர்ச்சி மற்றும் நிதி ஒதுக்கீடு குறித்தும் புதுடெல்லி மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறைத் தலைவர் அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டன.

22-9-04 சென்னை நகரில் முத்தியாலுப்பேட்டை, காளிகாம்பாள் கோயில், கச்சாலீசுவரர் கோயில் வேணுகோபால் சுவாமி கோயில்கள் ஆய்வு செய்யப்பட்டு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன.

24-9-04 தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டியல் துறையில் பல்கலைக்கழக மானியக்குழு நிதி நல்கையில் 'தென்னிந்திய வரலாற்றின் தொடக்க நிலையில் தமிழ்பிராமி கல்வெட்டுக்களின் பங்கு' என்ற கருத்தரங்கைத் தொடங்கி வைத்து சிறப்பு ஆணையர் சிறப்புரையாற்றினார்கள்.

25-9-04 பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் வரலாற்றுச் சின்னங்களில் 11வது நிதிக்குழு ஒதுக்கீட்டில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகள் ஆய்வு செய்யப்பட்டன. செங்கமேடு, கங்கைகொண்ட சோழபுரம் அகழ் வைப்பகம், (உட்கோட்டை) மாளிகைமேடு அகழாய்வு நடைபெற்ற இடம், கீழையூர் இரட்டைக் கோயில், ஆலம்பாக்கம், கோபுரப்பட்டி (அழகிய மணவாளம்) கோயில்கள் ஆய்வு செய்யப்பட்டு, மேம்பாட்டிற்கான அறிவுரைகள் வழங்கப் பட்டது. பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களில் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுக்கவும் அறிவுரை வழங்கப்பட்டது- திருச்சிராப்பள்ளி பதிவு அலுவலர் அலுவலகமும் ஆய்வு செய்யப்பட்டது.

27-9-04 அன்று செப்டம்பர் மாதத் திங்கட்பொழிவு தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் தலைமையில் முனைவர் இரா. நாகசாமி அவர்கள் (தொல்லியல்

துறை முன்னாள் இயக்குநர்) 'இந்திய மற்றும் அயல்நாட்டுக் கல்வெட்டுகள்-ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் 'பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள்' நூல் வெளியிடப்பெற்றது.

27-9-04, 28-9-04 ஆகிய நாட்களில் தொழில் நுட்ப அலுவலர்களின் பணிகள் ஆய்வு செய்யப்பட்டது. கல்வெட்டு படியெடுத்தல் முனைப்புத் திட்டம் முன்னேற்றம், தொழில்நுட்ப பணிகளின் மேம்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன.

தொகுப்பு ; கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர், சென்னை.

# WOOD FOSSIL - TIRUVAKKARAI

Tiruvakkarai, located at 155 km form Chennai on the National Highway-45, is one of the important geological areas where one can find number of out crops (protrusion) of fossilized trees of varies sizes. These are found embedded in Cuddalore Sandstone of Mio-pliocene age (20 million years). The Cuddalore Sandstone formation extent along the Coromandal Coast from Tuticorin in Tamilnadu to Vishakapatnam in Andhra-pradesh. Owing to its association with this formation fossilized tree found at Tiruvakkarai are dated to be 20 million years. These fossils belong to several rare species of conifers and palms. Since a piece of fossil wood donated by P. N. Easshwaar Money of Chennai to this Department is from Tiruvakkarai, date of the fossil is assigned to same period.

Fossilization of buried trees was due to the process of petrification in which woody matter was replaced by silica and the water in it expelled as a result of the compaction of the superposed sediments. The silica required for the petrification of the trees is considered to have been derived from ground water in solution.

In Tamilnadu fossilized tree trunks are recorded at Tiruvakkarai (Villupuram District) and Sattanur (Trichy District). The Geological survey of India has set up National Fossil Park in these two areas to preserve them for posterity and highlight their importance to the public.

**S. Sreekumar**, Technical Assistant.



23.8.04 திங்கட்பொழிவு - தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் திரு.தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் திரு.ஐராவதம் மகாதேவன், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் உரையாற்றினார்கள்.

Special Commissioner Thiru T.S. Sridhar, IAS delivered a talk on 'Archaeology and Tourism' at the Institute of Hotel Management, Catering Technology and applied Nutrition, Chennai-113 on 10-9-2004. Tmt. D. Grace Gideon, Principal is seated at left.





தொல்லியல்துறை சிறப்பு ஆணையர் திரு.தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் முனைவர் இரா.நாகசாமி (முன்னாள் தொல்லியல் துறை இயக்குநர்) அவர்கள் 'பாபநாசம் வட்டக்கல்வெட்டுகள்' நூல்வெளியிட, உலகத்தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் திரு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பெறும் காட்சி (27.9.04)



Danish delegations' visit
to Commissionerate on 11-9-2004



Megalithic dolmens, Mallasamudram
Krishnagiri District

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறைஅச்சகத்தில் அச்சிட்டு இத்துறை
சிறப்பு ஆணையர் திரு.தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் சார்பாக
கி.ஸ்ரீதரன், பதிவு அலுவலரால் வெளியிடப்பெற்றது.